Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மலர் - 36 இதழ் - 5 மே - 2023

தனிப்பிரதி ரூ.10/-

## 23-ம் வேனிற்கால வேதாகம முகாம் மே 8-10, 2023
## ஏலகிரிமலை









## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. ஆசிரியர் உரை | 3 |
| 2. உங்கள் கேள்வித்திறன்... | 12 |
| 3. பெண்கள் பகுதி | 14 |
| 4. வாலிபர் பகுதி | 18 |
| 5. சிறுவர் பகுதி | 23 |
| 6. உங்கள் சிந்தனையில்... | 24 |
| 7. கிறிஸ்துவுக்குள் யார்... | 28 |
| 8. ஆயிரம் வருஷம்... | 31 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 36 May - 2023 Issue - 5

ஆசிரியர் உரை

## மனங்கசந்து அழுதான்

பரலோகத்தின் தேவனால் மானிடம் வாழ்வதற்கென்று பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இப்பூமி உருண்டையின் எத்திக்கிலும் வாழும் மனித இனம் அனைத்திற்கும் பொதுவாக இருக்கும் அநேக காரியங்களில் ஒன்று அழுகை. ஆம், நான் அழுததே இல்லையென்றோ, அழுகை பற்றி எனக்குத் தெரியாது என்றோ, அழுதவர்களை நான் பார்த்ததே இல்லையென்றோ ஒருவரும் சொல்ல முடியாது. இப்படி, மனுக்குலம் முழுவதையும் ஏகமாய் பாதித்திருக்கும் அழுகை பற்றிய சம்பவங்கள் பரிசுத்த எழுத்துக்களால் நிறைந்திருக்கும் வேதாகமத்தின் பக்கங்களிலும் இடம் பெறத் தவறவில்லை. அப்படி இடம் பெற்றிருக்கும் ஒவ்வொரு அழுகைக்கான காரணமும், அந்த அழுகையின் தன்மையும் நமக்கு ஆவியானவரால் கொடுக்கப்படாமலில்லை.

ஆம், ஆபிரகாமுக்கு மறுமனையாட்டியாகத் திணிக்கப்பட்ட ஆகார் என்னும் அடிமைப் பெண், பிள்ளை சாகிறதை நான் பார்க்க மாட்டேன் என்று ''சத்தமிட்டு'' அழுததாகப் பார்க்கிறோம் (ஆதி. 21:16). அடுத்து, பலவருண அங்கி யோசேப்பு, தன் தகப்பன் யாக்கோபு மரித்த போது, **முகத்தின் மேல் விழுந்து** அழுதான் (ஆதி, 50:1) என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால், மேலுள்ள சம்பவங்களில் அழுதவர்கள் யாரும் மனங்கசந்து அழுததாக வேத வசனங்களில் சொல்லப் படவில்லை. அது மாத்திரமல்ல, மேலுள்ள சம்பவங்களுக்குச் சம்பந்தமான தேவ மனிதர்கள் யாரும், செய்த பாவத்திற்காக அழுததாகவும் நமக்குச் சொல்லப்படவில்லை.

இதன் மூலம், செய்த பாவத்திற்காக மனங்கசந்து அழுத சம்பவம் ஒன்று தான் உள்ளது என்று தெரிகிறது. இந்த ஒற்றைச்

சம்பவத்துக்குச் சொந்தக்காரன் அப்போஸ்தலன் பேதுரு. இந்தச் செம்படவனை **அப்போஸ்தலன் பேதுரு** என்பது சரியாக இருக்குமா அல்லது **தடுமாற்றப் பேதுரு** என்றழைப்பது பொருத்தமாக இருக்குமா என்பது விவாதத்திற்குரியது என்று சொன்னால் கூடத் தவறில்லை! ஏனெனில், பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பான இவனுடைய சீஷத்துவ வாழ்க்கையில் இவன் கடந்து வந்த பாதை அப்படிப்பட்டது.

சரி, இந்தத் தடுமாற்றப் பேதுரு எந்தச் சூழ்நிலையில் இப்படி மனங்கசந்து அழுதான் என்றும், அதன் பின்னணி என்ன என்றும் இப்பொழுது கவனிப்போம்.

மூன்றரை ஆண்டுகள் பெலஸ்தீனா தேசம் எங்கும் சுற்றி நடந்து ஊழியம் செய்த இயேசு ஆண்டவர், எருசலேமில் இருந்த ஒரு மேல் வீட்டில் தன் கடைசிப் பஸ்கா விருந்தை ஓர் அசாதாரண சூழநிலையில் கடைப்பிடித்தார் [லூக். 22:12]. அப்போது, சீடர் களோடு ஓர் உரையாடலை ஆரம்பித்து ஒரு பெரிய வாக்குத் தத்தத்தோடு நிறைவு செய்தார். ஏனெனில், அவருடைய சீடர்கள் எல்லாவற்றையும் விட்டு அவருக்குப் பின் சென்றதோடு அவருக்கு நேர்ந்த சோதனைகளில் அவரோடு கூட நின்றவர்கள் [மத். 19:27; லூக். 22:28]. நீங்கள் என் ராஜ்ஜியத்திலே என் பந்தியில் போஜனபானம் பண்ணி இஸ்ரவேலின் 12 கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாய்ச் சிங்காசனங்களின் மேல் உட்காருவீர்கள் [லூக். 22:30] என்பதே அந்த வாக்குத்தத்தம்.

இப்படி ஒட்டுமொத்த சீடர்களைப் பார்த்துப் பேசின இயேசு ஆண்டவர், அங்கே பேதுருவின் பக்கம் திரும்பிப் பேசத் தொடங்கி, சீமோனே, சீமோனே, இதோ கோதுமையைச் சுளகினால் புடைக்கிறது போலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்திரவு கேட்டுக் கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்; நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார் [லூக் 22:31-33]. அதற்குப் பேதுரு, **ஆண்டவரே, காவலிலும், சாவிலும் உம்மைப் பின்பற்றி வர ஆயத்தமாயிருக்கிறேன்** என்றான் [லூக். 22:31-38]. இயேசுவின் கூற்றுக்கு மாறாக இவன் பதில் இருந்த பொழுது இயேசு இவ்விதம் சொன்னார். **சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்று தரம் மறுதலிப்பாய்** என்று [லூக். 22:34].

இதைத் தொடர்ந்து இயேசுவுக்கு எதிரான காரியங்கள் வெகு விமரிசையாக நடந்தது. பன்னிரெண்டு பேரில் ஒருவனாகிய யூதாஸ், அன்பின் சின்னமான முத்தத்திற்குத் தீராத களங்கம் கற்பித்து, அதை துரோகத்தின் சின்னமாக மாற்றி இயேசுவைக்

காட்டிக் கொடுத்தான். அப்பொழுது, இயேசுவானவர் கைது செய்யப்பட்டு, பிரதான ஆசாரியர் வீட்டிற்குக் கூட்டிச் செல்லப்பட்டார். இந்தச் சூழ்நிலையில் தான், காவலிலும், சாவிலும் உம்மைப் பின்பற்றுவேன் என்று வாய் நீளத்தோடு பேசின நம் தடுமாற்றப் பேதுரு, இயேசுவுக்கு அருகில் பின்பற்றப் பயந்து தூரத்திலே பின் சென்றான். இயேசுவை ''தூரத்திலே பின்பற்றுவது'' அன்றும் சரி, இன்றும் சரி மிகவும் ஆபத்தானது. இவன் தூரத்திலே பின்பற்றினபடியால், அவன் பிரதான ஆசாரியனுடைய வீட்டுக்கு வந்த போது, தன்னை அங்கிருந்த யாருக்கும் தெரியாது என்ற நினைப்பு வந்தது. அதன் விளைவு, நெருப்பை மூட்டி உட்கார்ந்தவர்களுக்கு நடுவிலே போய் அசட்டு தைரியத்துடன் உட்கார்ந்தான்.

அடுத்த வசனத்தில் என்ன நடந்தது என்று தெரியும் தானே! அப்பொழுது ஒரு வேலைக்காரி அவனை நெருப்பண்டையிலே உட்கார்ந்திருக்கக் கண்டு, அவனை உற்றுப் பார்த்து; இவனும் அவனோடிருந்தவன் என்றான் [22:56]. அதற்கு,ஸ்திரீயே, அவனை அறியேன் என்று மறுதலித்தான். சற்று நேரத்துக்குப் பின்பு வேறொருவன் அவனைக் கண்டு: நீயும் அவர்களில் ஒருவன் என்றான். அதற்குப் பேதுரு, மனுஷனே, நான் அல்ல என்றான். இப்படி அவன் சொல்லி குறு,குறு நெஞ்சோடு கூனிக் குருகி உட்கார்ந்திருந்த போது, ஏறக்குறைய ஒரு மணி நேரத்துக்குப் பின்பு, வேறொருவன் அவனைப் பார்த்து, மெய்யாகவே இவனும் அவனோடிருந்தான், இவன் கலிலேயன் தான் என்று சாதித்தான். அதற்குப் பேதுரு மனுஷனே, நீ சொல்லுகிறதை அறியேன்'' என்றான். அவன் இப்படிச் சொன்னவுடனே, இயேசுவின் கூற்று மெய் என்பதை ஊர் அறியும்படியாகச் சேவல் கூவிற்று [லூக். 22:57-68].

அப்பொழுது கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப் பார்த்தார். சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவு கூர்ந்து, வெளியே போய் **மனங் கசந்து** அழுதான் [22:61.62]. பேதுரு, தான் கர்த்தருக்கு விரோதமாகச் செய்த செயலுக்காக அழுதான். அவருடைய வார்த்தைகளை உடனே நினைத்து அழுதான். பேதுருவின் அழுகை வேதாகமத்தின் பிற அழுகைகளிலிருந்து அவனை வேறுபடுத்திக் காட்டுவதோடு, அவனை மிகவும் உயர்த்தியும் காட்டுகிறது. தடுமாறித் தவறு செய்திருந்தாலும், கர்த்தரின் ஊழியத்தைத் தலைமையேற்றுச் செய்யும் தகுதி தனக்கிருக்கிறது என்பதை அந்த அழுகை தம்பட்டம் அடித்துக் காட்டுகிறது.

எப்படியெனில், அதே மேல் வீட்டில், அந்தப் பஸ்கா விருந்தின் போது இயேசுவோடிருந்து, பிறகு தடுக்கி விழுந்த வேறொரு சீடன் பற்றியும் நாம் வேத வசனங்களில் காணமுடியும். இவனுக்கும் சில சிறப்புகள் உரிமையாக உள்ளன. 12 பேரில் ஒருவனாக இருக்கும் பாக்கியம் பெற்றவன். பணத்தைக் கையாளுவதில் திறன் பெற்றவன். பஸ்கா விருந்திலும் இவனுக்கு அனுமதி கிடைத்தது. அவன் பெயர் **யூதாஸ் காரியோத்து.** அந்த விருந்தின் போது, இயேசு, உங்களில் ஒருவன் என்னைக் கூட்டிக் கொடுப்பான் என்ற ஒரு பெரிய குண்டைத் தூக்கிப் போட்டார். அது நாலாப் பக்கமும் சிதறி, எல்லாரும் வேர்க்க விறுவிறுக்க நானோ, நானோ என்று பதறிய போது, இசுவேைக் காட்டிக் கொடுக்க ஏற்கனவே விலை பேசி விட்ட யூதாஸ், தன் சதிச் செயலை அப்படியே விழுங்கி ஏப்பம் போட்டு விட்டு, ஏதும் அறியாத அப்பாவி போல, **ரபீ நானோ** என்று கேட்டான். நீ சொன்னபடி தான் என்று இயேசு நெத்தியடியாய்ப் பதிலுரைத்த போது, இந்தக் கல் நெஞ்சக்காரனின் இதயத்தின் ஏதாவது ஓர் ஓரத்தில் கொஞ்சமாவது ஈரம் இருந்திருந்தால், ஐயோ, குட்டு வெளியாகி விட்டதே என்று பயந்து நடுங்கி, அப்படியே நெடுஞ்சாண் கிடையாய் அவர் பாதத்தில் விழுந்து சரணாகதி அடைந்திருப்பான். ஆனால், இவன் கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல், அந்தப் பஸ்கா விருந்தில் பங்கு பெற்றதோடு, தன் சதித் செயலையும் திட்டமிட்டபடி அரங்கேற்றியுள்ளான்!

பேதுரு, யூதாஸ் ஆகிய இரண்டு பேரும் இயேசுவின் சீடர்கள் தான். இயேசுவுக்கு உண்மையாக இருக்க வேண்டியவர்கள். ஆனால், இரண்டு பேரும் துரோகம் செய்து விட்டார்கள். இது, இரண்டு பேருடைய சீஷத்துவ வாழ்க்கையிலும், மிக மோசமான திருப்பத்தை ஏற்படுத்தியது, சந்தேகமில்லை. ஆனால், தடுக்கி விழுந்த சூழ்நிலையைப் பேதுரு கையாண்ட விதத்திற்கும், யூதாஸ் கையாண்ட விதத்திற்கும் மிகப் பெரிய வேறுபாடு உண்டு. அந்த வேறுபாடு ஒருவனை நித்திய வாழ்வுக்கும், இன்னொருவனை நித்திய அழிவுக்கும் அழைத்துச் சென்றுவிட்டது.

பக்தி வாழ்க்கையில் எதிர் வரும் தடுமாற்றச் சூழ்நிலைகளை நாம் எப்படிக் கையாளுகிறோம் என்பது மிகவும் முக்கியம். சொல்லப்போனால், தான் தடுக்கித் தலைகுப்புற விழுந்த பிறகு யூதாஸ் மனமாற்றத்திற்கான வழியை நாடவே இல்லை என்று சொல்ல முடியாது. எப்படியெனில், காட்டிக் கொடுப்ப தற்குத் தான் கூலியாகப் பெற்றுக்கொண்ட முப்பது வெள்ளிக் காசைத் திரும்பக் கொண்டு வந்தான் [மத். 27:3]. அத்தோடு நிற்காமல், குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக் கொடுத்ததினால் நான் பாவம் செய்தேன் [மத். 27:4] என்று வாய்விட்டுச் சொன்னான். தன் தவறை உணர்ந்து

துக்கப்பட்டான். இந்தச் சமயத்தில் ஜீவனும், மரணமும் அவனுக்கு முன்பாக இருந்தது. ஆனால், அவன் சரியானதைத் தெரிந்தெடுக்கவில்லை. வெள்ளிக் காசை தேவாலயத்தில் எறிந்து விட்டு நான்று கொண்டு செத்தான் (மத். 27:5). ஏனெனில், அவன் துக்கம் தேவனுக்கேற்ற துக்கமாக இருக்கவில்லை. (2 கொரி. 7:10). எப்படியெனில், இவன் இயேசு மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு மனஸ்தாபப்பட்டுள்ளான் (மத். 27:3). ஆனால், இயேசுவைக் காட்டிக் கொடுத்ததற்காக இவன் மனஸ்தாபப்படவில்லை. ஒருவேளை, இயேசு மரணாக்கினைக்கு உட்படுத்தப்படாமல் இருந்திருந்தால், இவன் செயல் இவனுக்குத் தவறாகத் தெரிந்திருக்காதோ?

ஆனால், பேதுரு தனது தடுமாற்றச் சூழ்நிலையைக் கையாண்ட விதம் முற்றிலும் வித்தியாசமானது. பேதுரு இயேசு ஆண்டவரை மறுதலித்தது ஒரு வியாழன் மாலைப் பொழுது. அந்த இரவே, இயேசுவின் பார்வை பட்டபோது அவன் மனங் கசந்து அழுதுள்ளான். யூதாசைப் போல் தன் துரோகச் செயலுக்கான குற்ற உணர்வைத் தீர்ப்பு வெளியாகும் வரை சுமந்து கொண்டு அலையவில்லை. அதுமாத்திரமல்ல, யூதாஸ் தான் இயேசுவைக் காட்டிக் கொடுத்ததற்குப் பிறகு சீடர் கூட்டத்தை நாடி வரவேயில்லை. ஆனால், பேதுருவோ இயேசுவை மறுதலித்து மனங்கசந்து அழுததற்குப் பிறகு, உடனடியாகச் சீடர் பட்டாளத்தை தேடி வந்து அவர்களோடு தன்னை இணைத்துக் கொண்டான். எப்படியெனில், உயிர்த்தெழுந்த இயேசுவைப் பற்றிய செய்தியை மகதலேனா மரியாள், யோவன்னாள் போன்றவர்கள் பதினொருவருக்கும் அறிவிக்கத் தேடி வந்துள்ளார்கள். யூதாஸ் ஏற்கனவே செத்து விட்டான். இந்த நிலையில் 11 பேர் என்று சொல்லும் போது பேதுருவும் உள்ளடக்கமே.

அங்கே, அந்த ஸ்திரீகளின் செய்தி மற்ற சீடர்களுக்கு வீண் பேச்சாகத் தோன்றின போது, பேதுரு மாத்திரம் நம்பி கல்லறையினிடத்திற்கு ஓடியுள்ளான் (லூக். 24:11,12). அதுமாத்திரமல்ல, எப்பொழுதும் போல பேதுரு தன்னை கர்த்தருடைய ஊழியத்தில் முன்னிறுத்தியும் கொண்டான். இவனுடைய மாறிய இருதயத்தைக் கண்ட தேவன் மீண்டுமாக பேதுருவுக்கு அந்த வாய்ப்பைத் தந்தார். சபை ஸ்தாபிக்கப்பட்ட பெந்தெகொஸ்தே நாளில் செய்யப்பட்ட அந்த மகாப்பிரசங்கம் மறுதலித்த பேதுருவைக் கொண்டு தான் செய்யப்பட்டது. என்ன மனமாற்றம் பாருங்கள்!.

அருமையானவர்களே, இங்கே பேதுருவின் மனமாற்றத்திற்கான காரணங்கள் என்ன என்று ஏதாவது விளங்குகிறதா? யூதாசாலே முடியாதது பேதுருவால் எப்படி முடிந்தது? குறைந்தது இரண்டு காரணங்களை நாம் கவனிப்போம்.’

**1. இயேசுவின் வார்த்தைகளை நினைத்து அழுதான்.**

இயேசுவை மூன்று முறை மறுதலித்த தடுமாற்றப் பேதுரு தலைநிமிர்ந்து நிற்பதற்கு முதல் காரணமாக, அவன் இயேசுவின் வார்த்தைகளை நினைத்து அழுததைக் கூறலாம்.

இயேசு ஆண்டவருடைய வார்த்தைகளின் மேன்மையையும், முக்கியத்துவத்தையும் உலகமும், கிறிஸ்தவமும் அறியாத ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். இங்கே நான் கிறிஸ்தவம் கிறிஸ்துவின் வார்த்தைகளின் மேன்மையை அறிய வேண்டிய அளவுக்கு அறியாமல் இருக்கிறது என்று அர்த்தத்தோடு தான் சொல்கிறேன். ஏனெனில், ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக (யோவான் 20:30,31) இயேசுவால் நடப்பிக்கப்பட்ட **அற்புதங்களுக்குத் தரப்படும் முக்கியத்துவம்**, இயேசுவால் போதிக்கப்பட்ட **வார்த்தைகளுக்குக்** கிறிஸ்தவர்களால் இன்று தரப்படுவதில்லை. ஆனால், இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதற்காக இயேசு ஆண்டவரே வெளிப்படுத்தியுள்ள வசனத்தைக் கவனியுங்கள். **என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்** (யோவான் 12:48). அவருடைய வசனம் தான் கடைசி நாளில் நியாயந்தீர்க்கிறதாக இருக்கும்போது, அந்த வசனத்திற்கு இரண்டாமிடம், மூன்றாமிடம் கொடுப்பது எவ்வகையில் நியாயமாகும்?

யூதாஸ் மனந்திரும்பாமல் அழிந்து போனதற்குக் காரணம். இயேசு சொன்ன வார்த்தைகளை அவன் நினைக்காமற் போனதே. மாறாக, பேதுரு மனந்திரும்பி, மீண்டும் பரிமளித்ததற்குக் காரணம் இயேசு சொன்ன வார்த்தைகளை நினைத்ததுதான். இயேசுவின் வார்த்தைகளை நினைக்க வேண்டிய நேரத்தில் நினைக்காமல் இருப்பது எவ்வளவு பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்பதை எண்ணிப் பாருங்கள். தேவனுடைய வார்த்தைகளின் வல்லமை பற்றி எபிரெயர் ஆசிரியர், **தேவனுடைய வார்த்தையானது ஜீவனும், வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும், ஊனையும் உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது** என்கிறார் (எபி. 4;12). தேவனுடைய வார்த்தைகளின் வல்லமையை உணர்ந்திருந்தபடியால்தான் தாவீது **நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்** (சங்.119:11) என்று கூறுகிறார்.

அப்படியானால், அருமையானவர்களே, நம்முடைய வாழ்க்கையில் கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டுள்ள, சுயாதீனப் பிரமாணமாகிய புதிய பிரமாணத்திற்கு, அதாவது கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசங்களுக்கு நாம் எப்படிப்பட்ட மரியாதையும், முக்கியத்துவமும் கொடுத்து வாழ்ந்து கொண்டுள்ளோம்? மறுபடியும் சொல்லுகிறேன், பேதுரு மனந்திரும்பினதற்குக் காரணம் அவன் இயேசுவின் **அற்புதங்களை** நினைத்தல்ல. மாறாக, அவருடைய **வார்த்தைகளை** நினைத்ததுதான். இன்றைக்கு நாம் நம்முடைய பாவங்களிலிருந்து மனந்திரும்புவதற்கும், இரட்சிப்ப டைவதற்கும், கர்த்தரால் அவருடைய ஒரே சபையில் சேர்க்கப் படுவதற்கும் பக்தி வாழ்க்கையில் பரிசுத்தமாய் வாழ்வதற்கும், மறுமையில் பரலோகத்தைச் சுதந்தரிப்பதற்கும் இயேசுவின் **புதிய ஏற்பாட்டு வார்த்தைகள் தான்** தேவை. ஆகவே தான், பவுலடியார், மிலேத்து பட்டணத்தில் பேசும் போது **சகோதரரே, நீங்கள் பக்தி விருத்தியடையவும், பரிசுத்தமாக்கப் பட்ட அனைவருக்குள்ளும். உங்களுக்கு சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன் என்றார்.**(அப். 20:32).

ஆகையால், கிறிஸ்துவைப் பின்பற்றும் நம்முடைய பக்தி வாழ்க்கையில், கிறிஸ்துவின் சிலுவைக்குப் பின்னால் வாழும் நம்மைக் கட்டுப்படுத்தாத பழைய ஏற்பாட்டுக் காரியங்களுக்கும், (ரோமர் 15:4) பாரம்பரியங்களுக்கும் (மத் 15:6) ஒரு நோக்கத்தோடு கொடுக்கப்பட்டு, முடிந்துபோன (1கொரி. 13:8,9) அற்புத அடையாளங்கள். தீர்க்கதரிசனங்கள், அந்நிய பாஷைகள் போன்றவற்றிற்கும் நாம் முக்கியத்துவம் தராமல் இறுதி நாளில் நம்மை நியாயந்தீர்க்கும் வல்லமையுள்ள கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு வசனங்களை நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நினைக்கிறவர்களாயிருந்து, அவைகளுக்கு நம்மைச் சமூலமாக ஒப்புக் கொடுப்போமாக. அப்படிச் செய்வோமானால், பேதுருவை மறுபடியும் ஏற்று அவனைத் தம் சேவைக்காகப் பயன்படுத்தின பிதாவும், இயேசுவும் நம்மையும் அவர் காரியமாகப் பயன்படுத்துவர்.

### 2. அதுவும் உடனே நினைத்து அழுதான்

இயேசுவை மூன்று முறை மறுதலித்த தடுமாற்றப் பேதுரு, தலைநிமிர்ந்து நிற்பதற்குக் காரணமாக, அவன் இயேசுவின் வார்த்தைகளை உடனே நினைத்து அழுததைக் கூறலாம்.

தேவனுக்குப் பிரியமாக வாழ விரும்பும் ஒருவன் தன் பக்தி வாழ்க்கையில் செய்யும் தலையாய காரியம், தேவனுடைய

வார்த்தைகளை உடனடியாக நினைத்துச் செயல்படுவது தான். இப்படிச் செயல்பட்டவர்கள் தேவ அங்கீகாரத்தைப் பெற்றிருக் கிறார்கள். உடனடியாகச் செயல்படாமல் காலம் தாழ்த்தினவர்கள் யூதாஸ் போல ஆவியிலும், சரீரத்திலும் அழிந்து தான் போயிருக் கிறார்கள்.

ஆதியாகமத்தில், யோசேப்பு என்னும் சீர்மிகு இளைஞனை நாம் பார்க்க முடியும். ஒரு சமயம் அவன் எஜமானின் மனைவி அவனோடு தவறாக நடக்க அழைத்த போது, அவள் சொல்லுக்கு இணங்காமல்..... ''**தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்வது எப்படி**'' என்றான் (ஆதி. 39:7-9) சவாலான, சபலமான அந்த நேரத்தில் அவனுக்கு முன்பாக இரண்டு தரப்பு வார்த்தைகள் நின்றது. ஒன்று, எஜமான் மனைவியின் **ஆசை வார்த்தைகள்.** இரண்டு, தேவனுடைய **எச்சரிப்பு வார்த்தைகள்.** அப்பொழுது இந்த இளைஞன் தேவனுடைய வார்த்தைகளை உடனே நினைத்தான். ஆகவே தான், தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்வது எப்படி என்று சொல்ல முடிந்தது. ஆம், **தேவனுடைய வார்த்தைகளை** நாம் உடனே நினைப்பது நம்மை அழிவிலிருந்து காப்பாற்றும்.

உடனே செயல்பட்டவர்களுக்கு உதாரணமாக, புதிய ஏற்பாட்டில் நாம் அப்போஸ்தலன் பவுலடியாரைக் குறிப்பிடலாம். ஆம், அவர் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்த, தமஸ்குவிலிள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கி பிரயாணமாய் போனபோது இயேசுவாலே சந்திக்கப்பட்டான். (அப். 9:1-6). இப்படி அவன் சந்திக்கப்பட்ட நிகழ்வு குறித்துப் பின்னாளில் கலாத்தியருக்கு எழுதும் போது இப்படியாகக் குறிப்பிடுகிறார். தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும் பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது, **உடனே நான் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் யோசனை பண்ணவில்லை...** (கலா. 1:16,17) என்கிறார். அதாவது, **இயேசுவின் வார்த்தைகளுக்கு** நான் **உடனே கீழ்ப்படிந்தேன் என்று** கூறுகிறார். பேதுருவைப் போன்று பவுலடியாரும் ஊழியத்தின் பாதையில் வல்லமையாகப் பயன்பட்டதற்கான இரகசியம் இதுதான்.

மாறாக, உடனடியாகச் செயல்படாமல் ஆன்ம வாழ்க்கையில் அழிந்து போனதற்கு மிகச் சிறந்த உதாரணம் ஆளுநர் பேலிக்ஸ். பவுலடியார், ஒரு சமயம் விசாரணைக் கைதியாக இவனுக்கு முன்பாக நின்று, நீதியையும், இச்சையடக்கத்தையும். இனிவரும் நியாயத் தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில் பேலிக்ஸ் பயமடைந்து; இப்பொழுது நீ போகலாம் **எனக்குச் சமயமானது உன்னை அழைப்பிப்பேன் என்றான்** (அப். 24:25). ஆத்துமா ஈடேற்றத்துக்காக

உடனடியாகச் செயல்படும் வாய்ப்புக் கிடைத்தும் அதைத் தள்ளிப் போட்டான். ஆனால், மறுபடியும் அவனுக்கு வாய்ப்புக் கிடைத்ததாக வேத வசனங்களில் இல்லை. இன்னும், இதே பவுல், அத்தேனே பட்டணத்து அறிவு ஜீவிகளுக்கு, மார்ஸ் மேடையில் நின்று மனந்திரும்புதல், நியாயத் தீர்ப்பு, மரித்தோரின் உயிர்த்தெழுதல் போன்றவை பற்றிப் பேசிய பொழுது, சிலர்; நீ சொல்லுகிறதை **இன்னொரு வேளை** கேட்போம் என்றார்கள் [அப். 17:30-33]. அந்தச் சிலருக்கு இன்னொருவேளை அவர்கள் வாழ்க்கையில் வந்ததாக வேத வசனங்களில் இல்லை.

அப்படியானால், அருமையான வாசகர்களே! பரத்துக்கான நம்முடைய பக்தி வாழ்க்கையின் செயல்பாடு எத்தன்மை கொண்டதாக உள்ளது? இயேசு வாக்களித்துக் கட்டின ஒரே சபை பற்றி [மத். 16:18] நமக்குப் பிரசங்கிக்கப்படும்போதும், சபை சரித்திர நூலாகிய அப்போஸ்தலர் நடபடிகளில் வெளிப்படுத்தப் பட்டிருக்கும் இரட்சிப்பின் திட்டம் [அப். 4:12] பற்றி நமக்கு எடுத்துக் காட்டப்படும்போதும், நம்முடைய செயல்பாடு எப்படிப்பட்டதாக உள்ளது? நம்மை இறுதி நாளில் நியாயம் தீர்க்கும் அதிகாரம் கொண்ட கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு வார்த்தைகளுக்கு நாம் **உடனடியாகக்** கீழ்ப்படிந்து நடக்கப் போகிறோமா அல்லது காலத்தைத் தள்ளிப்போட்டு நம்முடைய ஆன்மாவை நரகத்திற்குக் கொண்டு செல்லப்போகிறோமா? சொல்லுங்கள்.

ஒருவேளை, நம் பக்தி வாழ்க்கையில் கிறிஸ்துவின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாதவர்களாக இருந்தால், பேதுருவைப் போல் அவருடைய வார்த்தைகளை நினைத்து, மனங்கசந்து அழுது, செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டும். அதற்காக என்ன விலை கொடுக்கவும் நாம் தயாராக இருக்க வேண்டும். தேவன் இதை நம் ஒவ்வொருவரிடத்திலும் எதிர்பார்க்கிறார்.

ஆகையால், யாரும் யூதாஸ் போல அழிந்து போய் விடாமல் பேதுரு போல் காப்பாற்றப்படவும், பயன்படுத்தப்படவும், உயர்த்தப்படவும் நம்மை ஒப்புக் கொடுப்போமாக! ஆமென்.

**நன்றி! நன்றி!! நன்றி!!!**

கொரோனா பெருந்தொற்றுக் காலத்துக்குப் பிறகு நடந்த 23-ம் வேனிற்கால வேதாகம முகாமில் தமிழகம் மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களிலிருந்து 350-க்கும் மேலாக கலந்துகொண்ட சுமார் 45 சபையாருக்கும், TV நேயர்களுக்கும், ஆசான் வாசகர்களுக்கும் நெஞ்சு நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். கர்த்தர் பலனளிப்பார்.

**– ஆசிரியர்.**

# உங்கள் கேள்வித்திறன் எப்படி?

J.C. சோட்

ஒருவருடைய சரீரப்பிரகாரமான கேள்வித் திறனைப் பற்றியது இக்கேள்வி என்று இத்தலைப்பைப் பார்த்து நீங்கள் முடிவுக்கு வரலாம். ஆனால், அப்படி நீங்கள் நினைத்திருந்தால் உங்கள் எண்ணம் தவறானது. நான் இங்கே கேள்விப்படுதலின் முக்கியத் துவத்தை வலியுறுத்துவதாக இக்கேள்வியைக் கேட்கிறேன். சரியான காரியங்களைக் கேள்விப்படுவது எவ்வளவு அவசியமானது என்பதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா? இதைக் குறித்து நீங்கள் சற்று சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் எதைக் கேட்கிறீர்களோ, அது உங்கள் விசுவாசத்தைத் தீர்மானிக்கிறதாக இருக்கிறது. ஆகையால், நீங்கள் சத்தியத்தை விசுவாசிக்க வேண்டுமென்றால், சத்தியத்தைக் கேட்க வேண்டும். அதே வேளையில் நீங்கள் பொய்யானவைகளைக் கேட்பீர்களென்றால், பெரும்பாலும் அதைத்தான் விசுவாசிப்பீர்கள். இது மிகவும் சுலபமானதாகும்.

நம் வாழ்க்கையில் நாம் எதைக் காண்கிறோமா எதைக் கேட்கிறோமோ எதைப் புரிந்து கொள்ளுகிறோமோ எதை ஏற்றுக் கொள்ளுகிறோமோ அவைகளாகவே பெரும்பாலும் இருக்கிறோம். நாம் உண்மையென்று எதை ஏற்றுக் கொள்ளுகிறோமோ அதன் உண்மைத் தன்மையை சரியாக விசாரிக்கவில்லையென்றால் ஒரு பொய்யை எப்படி விசுவாசிக்கிறோமோ அதேபோல்தான் உண்மையையும் விசுவாசிக்கிறவர்களாக இருப்போம்.

மதத்தின் பெயரால் ஏன் இத்தனை முரண்பாடான உபதேசங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன? ஏன், அநேக ஜனங்கள் எல்லா சபைகளும் ஒன்றுதான் என்று நினைக்கிறார்கள்? கிறிஸ்துவின் நாமத்தை விட்டு விட்டு சபைகளுக்கு ஏன் மதசம்பந்தமான பெயர்கள் வைக்கப்படுகிறது? ஏன் இத்தனை பிரிவுகள் காணப்படுகிறது? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் ஒன்றுதான். பெரும்பான்மையான மக்களுக்கு இவைகள் சத்தியம் என்று போதிக்கப் பட்டிருக்கின்றன. அவர்களும் சத்தியத்தின் உண்மைத் தன்மையை ஆராயாமல், அதை அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். வேறு விதமாகச் சொன்னால் அவர்கள் எதை விசுவாசிக்கிறார்களோ அதிலே அப்படியே இருக்கிறார்கள். அவர்களுக்கு இவ்விதமாகப் போதிக்கப்பட்டபடியால் அவர்கள் அதை விசுவாசிக்கிறார்கள்.

நாம் மதசம்பந்தமான காரியங்களில் சரியாக இருக்க வேண்டுமென்றால், நாம் தீமையானவைகளையல்ல, சரியானவைகளையே கேட்பதற்கு உறுதியெடுக்க வேண்டும். நாம்

மனிதன் மீது நம்பிக்கை வைப்பதை விட தேவன் மீது அதிக நம்பிக்கை வைக்க வேண்டும். ஏனென்றால், தேவன் நமக்கு என்ன சொல்லுகிறார் என்பதை உறுதி செய்ய வேதாகமத்தை அனுதினமும் வாசித்து, அதை அப்படியே விசுவாசித்து அதன்படி செய்ய வேண்டும். தேவனுடைய வார்த்தைகளைக் கேட்பதினால் மாத்திரமே உண்மையான விசுவாசம் உண்டாகும் [ரோமர் 10:17]. இதினிமித்தம் கிறிஸ்துவின் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவதின் மூலமாக இரட்சிப்பு உண்டாகிறது [எபி.5:8,9; மாற்கு 16:16].

சத்தியம் ஒன்றுதான், அந்தச் சத்தியம்தான் நம்மை விடுதலையாக்குகிறது [யோவான் 17:17;8:38]. மேலும், சத்தியத்தினிடத்தில் வரும் எல்லோரும் அதை ஏற்றுக் கொண்டால் ஒரே மாதிரியான சத்தியத்தை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படியுங்கள். இதினிமித்தம் மதசம்பந்தமான காரியங்களெல்லாம் ஒரே விதமாகத் தான் இருக்கும். இதில் வேறுபாடானவர்கள் தவறானவைகளை விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படிந்த படியால் அவர்கள் வெவ்வேறு விதமாக இருக்கிறார்கள்.

நாம் எந்த அளவு சத்தியத்தைப் பேசுகிறோமோ அந்த அளவு உலகம் அதை விசுவாசிக்கும். ஒரு தனி நபராக நீங்கள் இதை எப்படிப் பார்க்கிறீர்கள்? உங்களுக்கு எவைகள் போதிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறித்து ஆழமாகச் சிந்தித்திருக்கிறீர்களா? நீங்கள் எவைகளைக் கேட்கிறீர்களோ அவைகளைக் கூர்ந்து கவனிக்கிறீர்களா? நீங்கள் எவைகளைக் கேட்கிறீர்களோ அவைகளை ஜாக்கிரதையாகக் கவனித்து அதை ஆழமாகப் படித்து, ஆராய்ந்து ஒப்பிட்டுப்பார்த்து, கேள்வி கேட்டு நீங்கள் விசுவாசிக்கும் காரியத்தை இது உண்மைதான் உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை என்பதை நிச்சயித்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், நாம் கேட்கும் உண்மை சத்தியத்தை துருவித் துருவி சோதித்துப் பார்த்தாலும் அந்த சோதனைகளில் எல்லாம் உண்மை சத்தியமானது நிலைத்து நிற்கும். ஆகையால் நீங்கள் எதை விசுவாசிக்கிறீர்களோ அதை ஆராய்ந்து பாருங்கள். அதை வேதவசனங்களோடு ஒப்பிட்டுப் பாருங்கள். ஏனென்றால், நீங்கள் இதற்கு முன்பு தவறான சத்தியத்தை ஏற்றுக் கொண்டிருந்தால், அதை விட்டு விட்டு உண்மைச் சத்தியத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். கடந்த காலத்தில் தவறு செய்திருக்கிறோம் என்பதை ஒத்துக்கொள்வது கடினமானதுதான். ஆனாலும், நீங்கள் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளும்போதுதான் இரட்சிக்கப்பட முடியும். எனவே, நீங்கள் எதைக் கேட்கிறீர்கள் என்பதைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்!

✝

பெண்கள் பகுதி

# ஓ, எனக்கு அதற்கு நேரமில்லை!

Sis. ரேச்சல் ராஜநாயகம்

நான் உங்களுக்கு ஒரு சிறிய கதை சொல்லுகிறேன். அனிதா என்ற பெண் சோம்பேறி அல்ல. யாரும் அவளை அப்படிச்சொல்ல முடியாது. சுத்தத்தில் அவளுக்கு நிகர் அவளே என்றுசொல்லலாம். அவளுடைய காலணிகளும், பர்சும் எப்போதுமே ஒன்றுக்கொன்று பொருத்தமாக இருக்கும். அவள் அணிந்து கொள்ளும் உடையில் எந்தவொரு சுருக்கமும் இல்லாமல் இருக்கும். அவளுடைய குடும்பத்தினரும் அவள் பாணியையே பிரதிபலிப்பார்கள். தன்னுடைய காரை மிக அழகான தோற்றத்துடன் வைத்திருப்பதற்கு எவ்வளவு தேவைப்பட்டாலும் அவ்வளவையும் அதற்காக செலவு செய்து அதைப் பற்றி மகிழ்ந்திருப்பாள்.

அவளுடைய வீடு! அது ஓர் **அழகான வீட்டின்** கதையாகும். எந்தவொரு பொருளும் பழைமையடைவதற்கோ அல்லது நாள்பட்டதாகவோ இருக்க அவள் அனுமதிக்கமாட்டாள். மின்னிக் கொண்டிருக்கும் மேசை, நாற்காலிகளில் ஒரு புழுதியும் அண்டி அதன் மேனியை குறைக்க விடமாட்டாள். மிக உன்னிப்பாக பொருள்களை சுத்தம் செய்து, இந்த வருடம், அடுத்த வருடம், அதற்கடுத்த வருடம் என்று தன் வீட்டில் உள்ள அறைகளை சுத்தம் செய்வதில் மகிழ்ந்து போயிருப்பாள்.

அவளுடைய தோட்டம்! களைகள் வளர்வதற்கே பயப்படும். அவைகள் வளருவதற்கு நேரமும் இல்லை, ஏனென்றால் அனிதா ஒவ்வொரு நாள் காலையிலும் சில மணித்துளிகள், அந்தச் செடிகளை கவனித்து, இவளையும் மீறி துணிச்சலாக வளரும் களைகளை களைந்து விடுவாள். கோடை காலம் என்று வரும்போது அவளுக்கு ஒரு பெரிய தோட்டமே அமைந்து விடும். அவள் விதைகளை விதைத்து, மண்வெட்டியால் மண்ணை கிளறி, அதற்கு மருந்து போட்டு, உரம் வைத்து, பாதுகாத்து தன்னை ஒரு புனிதத்தன்மையுள்ள எறும்புபோல் உணரும் வரை வேலை செய்து கொண்டேயிருப்பாள். வசந்த காலத்தில் தன் குடும்பம் எதற்குமே தேவையில்லாத அளவுக்கு தானே எல்லாவற்றையும் சேர்த்து வைத்து விடுவாள்.

அவள் தன் கணவனை மட்டும் விட்டுவிடுவாளா! ஐயா, அவளுக்கு விசேஷமானவராயிருந்தார். அவள் அவருக்காகவே வாழ்வதை அவன் உணரும்படியாக செய்தாள். அவனுடைய எல்லா தேவைகளிலும் கவனம் செலுத்தி, அவனுடைய

மனநிலைக்கேற்ப நடந்து கொள்வாள். மனைவி என்ற முறையில் அவள் யாருக்கும் சளைத்தவள் அல்ல.

ஆனால், அவள் தன் குடும்பத்தில் ஓர் அடிமையைப் போல் இருந்ததில்லை. அனிதா தனக்கு மகிழ்ச்சி தரும் காரியங்களை தேர்ந்தெடுத்து, அதில் பல வகைகளிலம் தன்னுடைய திறமைகளை வளர்த்துக் கொள்வாள். வண்ணம் தீட்டுதல் போன்றவற்றை கற்றுக்கொண்டு அதற்கென்று நேரத்தை ஒதுக்கி அதன் மூலம் சிறிய வகையில் வேலை செய்வாள். ஓவியத்திலும் தன் பார்வையை செலுத்துவாள். அத்தோடு தையல் நுணுக்கம், மென்மையான சிற்பங்கள் செய்தல், ஒப்பனை உடையை தயாரித்தல், மரத்தால் செய்யப்பட்ட கைவினைப் பொருட்களை அடுக்குதல் போன்றவற்றால் ஏற்கனவே அழகாக இருக்கும் தன் வீட்டை மேலும் அழகுறச் செய்வாள். அவளால் செய்யப்பட்ட அத்தனை பொருட்களும் அவ்வளவு பயனுள்ள வேடிக்கை யாகவும், அவள் முயற்சியின் பலனாக கிடைத்த புதிய பொருட்கள். உண்மையாகவே ஆச்சரியத்தை தரக்கூடியதாகவே இருக்கும். அவைகள் அவளுடைய வீட்டை ஒரு பார்வையுள்ளதாகவும், பராமரிப்பு பெற்றதாகவும் வைக்கும். தன் பிள்ளைகளுக்கு அன்புள்ளம் கொண்ட தாயாகவும் அவள் இருக்கிறாள். ஆ! வாழ்க்கையானது எவ்வளவு நிறைவானதாகவும் எவ்வளவு நல்லதாகவும் இருக்கிறது. ஆமாம்..... நல்ல வாழ்க்கை....

பல நல்ல கிறிஸ்தவர்கள் இதைப்போலவே வாழ்ந்து வருகிறார்கள். தங்கள் சிறிய குடும்பத்தோடு அழகான ஆடைகளை அணிந்து கொண்டு ஆராதனைக்குச் செல்வதில் விருப்பம் கொள்கின்றனர்.

ஆனால், வேத பாட வகுப்பில் போய் கற்றுக் கொள்வது? **ஓ, எனக்கு அதற்கு நேரமில்லை...** கிறிஸ்தவரல்லாதவரோடு சேர்ந்து வீட்டில் வேதபாட வகுப்பிற்கு ஆயத்தப்படுத்துவது? **ஓ, எனக்கு அதற்கு நேரமில்லை...** அந்த அழகான வீட்டை விருந்தோம்பல் செய்வதற்கும், தேவனுக்கென்று கனி கொடுப்பதற்கும் பயன்படுத்துவது? **ஓ, எனக்கு அதற்கு நேரமில்லை...**

சமுதாயத்தில் உள்ள கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களோடு சேர்ந்து, அவர்களுடைய பிரச்சனைகள், அவர்களுக்கு ஆவிக்குரிய, உணர்வுப்பூர்வமான சரீரப்பிரகாரமான ஆலோசனைகள், பொருளாதார உதவிகள் போன்றவற்றை செய்வது? **ஓ, எனக்கு அதற்கு நேரமில்லை...**

வியாதிப்பட்டவர்களையும், விசுவாசத்தில் பெலவீனரையும் போய் சந்தித்து, எந்த வகையிலும் அவர்களுக்கு உதவி செய்ய எதிர்பார்த்திருப்பது? **ஓ, எனக்கு அதற்கு நேரமில்லை...** வேதாகம

அஞ்சல் வேலையில் உதவி செய்வது? **ஓ, எனக்கு அதற்கு நேரமில்லை...** அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுக்கும். உலகத்தில் உள்ள அனைவருக்கும் சுவிசேஷத்தை கூறும் வேலையில் தன்னை ஈடுபடுத்திக்கொள்வது? **ஓ, எனக்கு அதற்கு நேரமில்லை...**

நாம் வாழும் இந்த உலகிலே நாம் உட்கார்ந்து நம்மை நாமே சோதித்து கணக்கெடுத்துப் பார்ப்பது அவசியம். ஒருவேளை, நாம் வசிப்பதற்காக சில சட்டங்களை வைத்துக்கொண்டு கிறிஸ்தவர்களுக்கு உண்டான பொறுப்புகளைப் பற்றி தேவன் என்ன சொல்கிறார் என்பதற்கு முக்கியத்துவம் கொடாமல் இருந்து விடுகிறோம்.

ஒரு நல்ல மனைவியாகவோ, தாயாகவோ, வீட்டை பராமரிப்பவளாகவோ அல்லது ஒரு நல்ல கணவனாகவோ, தகப்பனாகவோ, குடும்பத்திற்கு அனைத்தும் வழங்குபவராகவோ இருப்பதில் தவறேதுமில்லை. சொல்லப்போனால், இந்த காரியங்களெல்லாம் நல்லவைகள். இதில் நம்முடைய பொறுப்புகளை நிறைவேற்ற மிகவும் அவசியமாகும். ஆனால், மிகவும் ஆபத்தானது என்னவெனில், இந்த சரீரப்பிரகாரமான நல்ல, சரியான காரியங்களே நாம் உயிரோடு இருப்பதை சாப்பிட்டு விடக்கூடாது. அப்படியிருக்கும் பட்சத்தில், நாம் கிறிஸ்தவர்களாக மாறினபோது உண்மையாகவே எடுத்துக்கொண்ட தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு நமக்கு நேரம் கிடைக்காமல் போய்விடும் சுறுசுறுப்பாக இருப்பது நல்ல காரியம் என்பதற்காக, தலைக்கு மேல் காரியங்கள் போக விட்டுவிடக்கூடாது. உண்மை என்னவென்றால், நம்மைப்பற்றியும், நமக்காக செலவு செய்யும் நேரத்தைப் பற்றியும் ஒரு குருட்டுதனமான நல்ல எண்ணம் கொண்டு விடுகிறோம். **கிறிஸ்தவம் என்பது முதலாவது, நமக்கு சேவை செய்து கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட ஒன்று அல்ல.** கிறிஸ்தவத்தை ஏதோ நமக்கு கிடைத்த ஒரு சொத்து என்று நினைத்து, ஏற்கனவே நிறைவாயிருக்கிற வாழ்க்கையை மீண்டும் பூர்த்தி செய்து கொண்டு வாழ்வோமானால் நாம் அதை தவறாக பயன்படுத்துகிறோம். இயேசுகிறிஸ்து ஒரு மாதிரியை வைத்திருக்கிறார். மனுஷகுமாரன் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்ய வந்தார் (மத்.20:28). அவரைப் பின்பற்றுகிற நாமும் இவ்வாறாக அறிவுறுத்தப்படுகிறோம். **அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்** (கலா.5:13)

கிறிஸ்தவன் ஒருவேலையைச் செய்யும் போது அது கட்டாயம் கனிகொடுக்கக் கூடியதாக இருக்கவேண்டும். மத்.3:10 கூறுகிறது **ஆகையால், நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு**

**அக்கினியிலே போடப்படும்.** சத்தியத்தையும் கிறிஸ்துவின் அன்பையும் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளாமல், மற்றவர்களைப் பற்றிய கரிசனையில்லாமல் இருப்பது, தான் மிகவும் அலுவலாக இருக்கிறேன் என்பதினால் அல்ல. தவறான காரியங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, தங்களுக்கு நல்ல வைகள் என்று கருதும் காரியங்களை செய்துவிட்டு, தேவனுக்கு முன்பாக தவறு செய்கிறவர்களாய் மாறிவிடுவதால் தான்

இந்த **நல்ல வாழ்க்கை,** நல்ல காரியங்களைச் செய்வதில் மிகவும் சுறுசுறுப்பு, சரியான நல்ல காரியங்களுக்கு முன்னுரிமை அளிக்காமல் இருந்தால், தாலந்துகள், நம்முடைய செல்வாக்கு, பணம் இவைகளெல்லாம் சாத்தானுடைய வல்லமையான ஆயுதங்களாகும். நாம் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய விஷயம் என்னவெனில் நமக்கு எது முக்கியமாய் தோன்றுகிறதோ அதையே செய்ய நம்மை உட்படுத்தி விடுகிறோம். உலகத்தின்பால் ஏற்படும் அதிக ஈர்ப்பு இதற்கு காரணமாக இருக்கலாம்.

இதை வாசிக்கும் எனதன்பு சகோதரிகளே! அனிதாவின் கதை நமக்கு பாடம் கற்பித்திருக்கும் என்று நம்புகிறேன். நான், என் வீடு, என் பிள்ளைகள், என் கணவர் என்று ஓயாமல் அதே சிந்தனையோடு செயல்படாமல், கர்த்தருடைய காரியங்கள், விசேஷமாக சபைக்கடுத்த காரியங்களில் நம்மை ஈடுபடுத்துவது மிகவும் அவசியமானது, நன்மையானது.

நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து மலைப்பிரசங்கத்தில், **முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் கூட உங்களுக்குக் கொடுக்கப்படும்.** (மத்.6:33). என்று கூறுகிறார். அனிதாவைப் போல்தான், இன்றைக்கும் அநேக சகோதரிகள் வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம். சபை சம்பந்தமான காரியங்களுக்கு நேரமில்லாமல் போய்விடுகிறது. கிறிஸ்துவின் சாயலை தரித்துக்கொண்டிருக்கும் நாம் அவரைப் போலவே ஊழியம் கொள்ளாமல், ஊழியம் செய்து, அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியம் செய்வோம். நம்முடைய பெரும்பாலான நேரத்தை அவருக்கென்றே செலவு செய்வோம். அப்படிச் செய்ய தேவன் உதவி செய்வாராக!

✝

*நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பயன்படுத்திக்கொள்வோம்! ஆமென்!!*

வாலிபர் பகுதி

# பெசலேயேல்

**Dr. ஏபில் நாயகம்**

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான வாலிப சகோதரர்களே, உங்கள் யாவருக்கும் இன்பராம் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வாழ்த்துக்கள். இந்த மாதமும் இவ்விதழின் வழியாக உங்களை சந்திப்பதிலே பெருமகிழ்ச்சி அடைகிறேன். நிரந்தரம் இல்லாத இந்த பூமியின் வாழ்க்கையிலே நாம் வாழ்ந்து கொண்டிருந்தாலும், சதாகாலத்தின் தேவனுடைய பிள்ளைகளாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அப்படியானால், முதலும், முடிவும் இல்லாத தேவனுக்கு உகந்த பிள்ளைகளாக நாம் வாழ வேண்டியது அவருடைய எதிர்பார்ப்பாகவும், நம் மேல் விழுந்த கடமையாகவும் இருக்கிறது. இம்மையிலே அவரை மறந்தால் மறுமையில் அவரோடு கூட இருப்பதை நாம் மறந்து விட வேண்டும் என்பதே உண்மை.

பிரியமானவர்களே, தேவனுக்கு பிரியமாக வாழ, நமக்கு வழிகாட்டியாக இருப்பது அவர் நமக்கு விளம்பிக் கொடுத்த வேத புத்தகமே. அதில் நாம் தேவ மனிதர்களின் மூலமாகவும், தேவ ஜனங்கள் மூலமாகவும், அவர்களுக்கு நேரிட்ட சம்பவங்கள் மூலமாகவும், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பல பாடங்களை கற்றுக் கொள்ள முடியும். அந்த வகையிலே இந்த மாதம் வேதத்திலே குறிப்பிடப்பட்டுள்ள ஒரு நபரை பற்றி படிக்கவிருக்கிறோம். வேதாகமத்திலே பல மனிதர்களைப் பற்றி நாம் படிக்க முடியும். ஆனால், படிக்கின்ற எல்லா மனிதர்களையும் நாம் நினைவில் கொள்வதில்லை.

சில மனிதர்களை அவர்களுடைய விசுவாசத்திற்காக, நற்கிரியைகளுக்காக, எப்படி தனித்துவத்தோடு விளங்கினார்கள் என்பதற்காக நினைவில் கொண்டிருப்போம். சில மனிதர்களை அவர்களுடைய பாவச் செயல்களுக்காக, தீய எண்ணங்களுக்காக நினைவில் கொள்கிறோம். இந்த இரு சாரார் இடம் இருந்தும் நமக்குத் தேவையான பாடங்களை கற்றுக் கொள்கிறோம்.

சில மனிதர்களைப் பற்றி வேதாகமம் அதிகமாக பேசுவதில்லை என்றாலும் அப்படிப்பட்டவர்களிடமிருந்தும் நாம் காரியங்களை கற்றுக்கொள்ள முடியும். இந்த வரிசையில் யாத்திராகமம் 31 ஆம் அதிகாரத்தில் இடம் பெற்றிருக்கும் **பெசலேயேல்** இருக்கிறார். அதிகமாக படிக்கப்படாதவராகவும், அதிகமாக நினைவில் கொள்ளபடாதவராகவும் இவர் இருக்கிறார். இவரிடமிருந்தும், இவர் சம்பந்தப்பட்டிருக்கும் சம்பவங்களிலிருந்தும் இன்றைய நாட்களுக்கு தேவையான பல பாடங்கள் அடங்கியிருக்கிறது. என்றாலும் வாலிபர்களாகிய நமக்கு தேவையான இரண்டு பாடங்களை இந்த மாதம் நாம் கற்றுக்கொள்ள இருக்கிறோம். இவரைக் குறித்து

பார்ப்பதற்கு முன்பாக சில பின்னணி தகவல்களை நாம் முதலில் தெரிந்து கொள்வோம்.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் இஸ்ரவேல் ஜனங்களை தம்முடைய வல்லமையினால் மீட்டு வந்தார். அடிமைத்தனத்திலிருந்து மீண்டு வந்த வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாகிய தம்முடைய ஜனங்களை அவர் நேசித்தார். தன்னுடைய ஜனம் எப்படி இருக்க வேண்டும் என்ற வரைமுறைகளை கொடுத்ததோடு மாத்திரமல்லாமல், அவர்களோடு வாசம் செய்ய வேண்டும் என்று விரும்பினார். அவருடைய பிள்ளைகள் தான் வகுக்கும் வரைமுறைகளுக்கு உட்பட்டு வாழ வேண்டும் என்பதும், தன்னுடைய பிள்ளைகளோடு வாசம் செய்ய வேண்டும் என்பதுமே அவருடைய அன்பின் வெளிப்பாடாக அப்பொழுதும், இப்பொழுதும், எப்பொழுதும் இருக்கிறது. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து செங்கடல் வழியாக கடந்து வந்தவர்களிடம் எப்படி வாசம் செய்ய வேண்டும் என்று தேவர் நினைத்தாரோ, அதைப்போல இன்றும் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து கிறிஸ்துவின் ரத்தத்தின் வழியாக கழுவப்பட்டவர்களோடு வாசம் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்.

அப்படி இஸ்ரவேல் ஜனங்களின் நடுவே அவர் வாசம் பண்ணுவதற்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை ஆயத்தப்படுத்த வேண்டும் என்று மோசேயிடம் சொன்னார் [யாத்திராகமம் 25:8]. இங்கே ஒரு காரியத்தை நாம் கவனிக்க வேண்டும். இஸ்ரவேல் ஜனங்களோடு அவர் வாசம் செய்ய அமைக்கப்படவிருந்த கூடாரம் பரிசுத்தமாக இருக்க வேண்டியதாக இருந்தது. ஆம், இன்றும் தேவன் நம்மோடு வாசம் செய்ய, நம்மில் பரிசுத்தம் அவசியம். நாம் பரிசுத்தமாக இல்லாமல் தேவன் நம்மோடு வாசம் செய்ய வேண்டும் என்று நினைப்பது வீணான சிந்தனை,

பிரியமானவர்களே, 25 ஆம் அதிகாரம் தொடங்கி 31 ஆம் அதிகாரம் வரை, அவர் வசிக்க இருக்கும் கூடாரம் செய்யப்பட வேண்டிய விதம், அதில் இருக்க வேண்டிய பொருட்கள், அந்த பொருட்களை செய்ய வேண்டிய விதம் என்று பல காரியங்களை தேவன் மோசேக்கு சொன்னார். அதை வாசித்தால், எப்படி இவ்வளவு காரியங்களை மோசே பொறுமையோடு கேட்டு இருப்பான் என்றே எண்ணம் வருகிறது. 31 வது அதிகாரம் முதல் ஐந்து வசனங்களை நாம் வாசிக்கும் பொழுது, நிச்சயமாகவே மோசே ஒரு நிம்மதி பெரும் மூச்சு விட்டிருப்பார் என்றே தோன்றுகிறது. எப்படியாக இவ்வளவு வேலையை செய்யப் போகிறோம் என்ற எண்ணம் மோசேயின் மனதில் தோன்றி இருந்ததனால், இந்த வேலை அனைத்திற்கும் ஒரு மனிதனை தேவன் நியமித்திருக்கிறார் என்ற செய்தி நிச்சயமாகவே மோசேக்கு ஒரு நிம்மதியை கொடுத்திருக்கும். அப்படி தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு மனிதன் தான் ஊருடைய மகனான

ஊரியின் குமாரன் பெசலேயேல், வேதாகமத்திலே முதன் முதல் தேவ ஆவியினாலே நிரப்பப்பட்ட மனிதன் என்ற விசேஷம் பெசலேயேலுக்கே உரியது (31:5), இந்த மனிதனுக்கு மோசேயின் மூலம் தேவனால் கொடுக்கப்பட்ட வேலைகளில் உதவி செய்ய அகோலியாபையும், ஞான இருதயம் உள்ள யாவரையும் தேவன் ஏற்படுத்தினார்(31:6),

பெசலேயேல் என்ற இந்த மனிதனிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளக்கூடிய பாடம் என்ன? **முதலாவது**, தேவனுடைய கட்டளை இப்படியாக இருக்கிறது என்று மோசேயின் மூலம் சொல்லப்பட்ட பொழுது, எந்தவிதமான மறுப்பும் தெரிவிக்காமல் தேவனுடைய வேலையை ஏற்றுக் கொண்டான். இதை கவனிக்க வேண்டிய அவசியம் என்ன என்ற கேள்வி நிச்சயம் வரும். பிரியமானவர்களே, நன்றாக ஒரு காரியத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேவனுடைய கட்டளையை ஏற்றுக் கொள்ளாமல் சாக்குப் போக்குகளை சொல்லி அதை நிச்சயம் புறக்கணித்து இருக்க முடியும். அவனுடைய சூழலும் அதற்கேற்றாற் போல தான் இருந்தது. ஏனென்றால், இவர்கள் எகிப்தில் இருந்து இப்போது தான் வெளியே வந்தார்கள். எகிப்தில் இஸ்ரேல் ஜனங்கள் செய்த வேலையோ சாந்தும் செங்கலும் ஆகிய இவைகளை செய்கிற வேலைகள் மற்றும் வயலில் செய்யப்படும் சகல வித வேலைகளுமே. இரண்டிலும் எகிப்தியர்களால் கொடுமையாக நடத்தப்பட்டார்கள். வேற எந்த வேலையும் செய்வதற்கு இவர்களுக்கு தெரியாது.

இப்படிப்பட்ட சூழலில் தான் மோசேயின் மூலம் தேவனுடைய கட்டளை இவனுக்கு வருகிறது. வசனம் –3 தொடங்கி 11 வரை நாம் வாசித்தோம் என்று சொன்னால், **விநோதமான வேலைகளை அவன் யோசித்துச் செய்கிறதற்கும், பொன்னிலும், வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்கிறதற்கும், இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதிக்கிறதற்கும், மரத்தில் சித்திர வேலைகளைச் செய்கிறதற்கும்,மற்றும் சகலவித வேலைகளையும்** என்று ஒரு பெரும் பட்டியல் கொடுக்கப் பட்டிருப்பதை வாசிக்க முடியும். பொன், வெள்ளி, வெண்கலம், விலை உயர்ந்த கற்கள், வஸ்திரங்கள் அபிஷேக தைலம் மரங்கள் ஆகிய இவை அனைத்தைக் கொண்டும் அந்த மனிதன் வேலை செய்ய வேண்டும். மேலே கூறப்பட்டுள்ள இந்த காரியங்கள் ஒவ்வொன்றிலும் சிறப்பாக வேலை செய்வதற்கு, அந்தந்த காரியங்களில் திறமையானவர்களால், அதில் கைதேர்ந்தவர்களால் மட்டுமே முடியும். ஆனால் இவை அனைத்தைக் கொண்டும் ஒரே மனிதனால் சிறப்பாக வேலை செய்ய முடியுமா என்ற கேள்வி வரும் பொழுது, முடியாது என்ற பதில் சுலபமாக நம் மனதில் தோன்றும்.

ஆனால், பெசலேயேல் எந்தவிதமான மறுப்பும் தெரிவிக்காமல் தேவனுடைய கட்டளைகளுக்கு அப்படியே கீழ்ப்படிந்து இருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்த தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மோசே, தேவனால் அழைக்கப்பட்ட பொழுது சாக்குப் போக்கு சொல்லி அந்த அழைப்பில் இருந்து தன்னை விலக்கிக் கொள்ளலாம் என்றல்லவா நினைத்தார். அந்த வகையிலே, பொறுப்பிலே மோசேயைக் காட்டிலும் சற்று சிறியவனாக இருந்தாலும், தேவனுடைய காரியங்கள் மீது தனக்கு இருந்த உறுதியிலே பெசலேயேல் மோசேயை காட்டிலும் பெரியவனாக இருக்கிறார். வாலிபர்களாகிய நாம் கவனிக்க வேண்டியது, தேவனுடைய காரியங்கள் இம்மனிதனுக்கு இருந்த **விருப்பமும், ஆயத்த நிலையுமே.**

பிரியமானவர்களே நம்மில் பலருக்கு தேவனுடைய வேலையை செய்ய வேண்டும் என்று ஆசை இருக்கிறது. ஆனால், தேவனுடைய வேலை செய்ய வாய்ப்பு கிடைக்கும் பொழுது ஆசை செயல்பாட்டுக்குள்ளாக வருகிறதா என்று நாம் பார்த்தால், பல நேரங்களில் அப்படி வருவதில்லை. பெரும்பாலான நேரங்களில் நமக்கு இருக்கும் ஆசை, ஆசையாகவே இருந்து விடுகிறது. வாய்ப்பு கிடைக்கும் பொழுது அது செயலில் தெரிவதில்லை. பல சாக்குப் போக்குகள் நம்முடைய ஆசையை செயலாக மாற விடுவதில்லை.

இயேசு கிறிஸ்துவிடம் வந்த பணக்கார வாலிபனும் அப்படிப்பட்ட ஒரு நிலையில் தான் இருந்தான். நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால், அதைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்ட போது, தனக்கு இருக்கும் கவலைகளால் நெருக்கப்பட்டு, சோகத்தோடு அவன் வழியே போனான். ஆக, ஆசை இருப்பது மட்டும் போதாது. வாய்ப்புகள் கிடைக்கும் பொழுதும், வழங்கப்படும் பொழுதும் தேவனுடைய வேலையை செய்ய அதை நாம் பயன்படுத்த வேண்டும். சாக்குப் போக்கு சொல்கிறவர்களாக நாம் இருந்தோமானால் இழப்பு நம்முடையது. தேவனுடைய வேலை பல பெசலயேல்களால் நடந்து கொண்டே தான் இருக்கும். தேவன் அதை நடத்திக் கொண்டுதான் இருப்பார். நீங்களும் பெசலேயேலைப் போல தேவனுடைய வேலையில் ஆசையோடும் ஆயத்தத்தோடும் இருக்கத் தயாரா?

இரண்டாவதாக, பெசலையேலுக்கு தேவன் மீது இருந்த நம்பிக்கையும் உறுதியும் நமக்கு பாடமாக அமைகிறது. கொடுக்கப்பட்ட வேலை கடினமான ஒன்றாகவும், தன்னுடைய முயற்சி அனைத்தையும் கொடுக்கப்பட வேண்டிய ஒன்றாக இருந்தாலும், தேவன் தன்னை தேர்ந்தெடுத்திருக்கிறார், தேவன் தம்முடைய ஆவியினால் என்னை நிரப்பி இருக்கிறார் என்ற தைரியத்தோடு அவன் வேலை செய்ய ஆரம்பித்தார். தன்னைத் தெரிந்து

கொண்ட தேவனின் வல்லமையை அவன் தெரிந்து வைத்ததோடு மட்டுமல்லாமல் அதைப் புரிந்தும் வைத்திருந்தான், எப்படி வல்லமையாய் பார்வோனுடைய கைகளில் இருந்து தங்களை மீட்டுக் கொண்டு வந்தார் என்பதை அறிந்திருந்தார். அப்படிப்பட்ட தேவனால் என்ன செய்ய முடியும் என்பதை புரிந்து வைத்திருந்தார்.

பல வேலைகளிலே நமக்கு இப்படிப்பட்ட தைரியம் வருவதில்லை. சூழ்நிலைகளின் நெருக்கத்தாலே நாம் தேவன் மீது வைக்க வேண்டிய அளவுக்கு விசுவாசத்தையும், நம்பிக்கையையும் வைக்கத் தவறி விடுகிறோம். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலன் உண்டு என்று பவுல் தைரியமாய் சொல்வது போல நம்மால் சொல்ல முடிகிறதா? இல்லை. காரணம், தேவனை பற்றி அறிந்த நாம், அறிந்த அளவிற்கு அவரை புரிந்து கொள்ளவில்லையோ? என்றே எண்ண தோன்றுகிறது. '**நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன்**' (II தீமோத்தேயு-1:12) என்று தைரியமாய் சொல்லும் அளவிற்கு நம்முடைய விசுவாசம் உறுதியும் நம்பிக்கையும் இருக்கிறதா என்று கேள்வியை நமக்கு நாமே கேட்டுக் கொள்வோம்.

யாத்திராகமம் 38:22 இல், பெசலேயேல் கர்த்தர் மோசேக்கு கற்பித்ததை எல்லாம் செய்தான் என்று நாம் வாசிக்கிறோம். தேவனுடைய வேலையை, தேவனை முழுமையாக நம்பி ஆரம்பித்த பெசலேயேல், அதை செய்து முடித்திருக்கிறார். கொடுக்கப்பட்டிருந்த வேலையின் தன்மை அதிகமானதாக இருந்தாலும் தேவனுக்காக அதை செய்து முடித்தார். கூடாரம் முழுமையாக அமைக்கப்பட்டதற்கு பிற்பாடு (40:34), தேவனுடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பினது என்று நாம் வாசிக்கிறோம். பெசலேயேலுக்கு கொடுக்கப்பட்ட அறிவுரைகள், கொடுக்கப்பட்ட வண்ணமாகவே நிறைவேற்றப்பட்டபடியினால் தேவனுடைய மகிமை அங்கே இறங்கினது. கொடுக்கப்பட்ட அறிவுரைகள், கொடுக்கப்பட்ட வண்ணமாகவே நிறைவேற்றப்படாமல் இருந்திருக்குமானால், தேவனுடைய அங்கீகாரம் பெறப்பட்டு மகிமை இறங்கி இருக்குமா? என்ற கேள்விக்கான பதிலை உங்களிடமே விட்டுவிடுகிறேன். ஆக எந்த சூழ்நிலையிலும் தேவனுடைய பிள்ளையாக வாழ, தேவனுடைய வேலையை செய்ய, அவர் நடத்துவார் என்ற விசுவாசத்தோடு இருக்க, அவரை அறிந்த வண்ணம் நாம் அவரை புரிந்துகொள்ள, ஒரு பெசலேயேலாய் வாழ நீங்கள் ஆயத்தமா?

பிரியமானவர்களே, பெசலேயேல் என்ற இந்த மனிதனிடமிருந்து நாம் இரு பாடங்களை கற்றுக் கொண்டோம். இந்த இரு பாடங்களையும் நம்முடைய வாழ்க்கையிலே நடைமுறைப்படுத்துவோம். தேவன் தாமே நமக்கு உதவுவாராக. ஆமென்!

சிறுவர் பகுதி

# தாலந்துகளின் உவமை!

Dr. பிரெய்ஸி

ஹெலோ குழந்தைகளே! நீங்கள் அனைவரும் நன்றாக இருப்பீர்கள் என்று நம்புகிறோம்.எங்கள் கட்டுரைகளை ஒவ்வொரு மாதம் படித்து வருகிறீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். இம்மாதம் இயேசு சொன்ன ஓர் உவமையை பார்ப்போம்.

மத்தேயு25:14–30ல் புறத்தேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகிற ஒரு மனுஷன், தன் ஊழியக்காரரை அழைத்து, அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக, ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும், ஒருவனிடத்தில் ஒரு தாலந்தும் கொடுத்து, உடனே பிரயாணப்பட்டுப் போனான் என்று பார்க்கிறோம். ஐந்து தாலந்தை வாங்கினவன் போய், அவைகளைக்கொண்டு வியாபாரம் பண்ணி, வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தான். இரண்டு தாலந்தை வாங்கினவனும், வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தான். ஒரு தாலந்தை வாங்கினவனோ போய், நிலத்தைத் தோண்டி தன் எஜமானுடைய பணத்தைப் புதைத்து வைத்தான்.

அன்புள்ள குழந்தைகளே, தேவன் உங்களுக்கு பல்வேறு திறமைகளை அளித்துள்ளார்.அவற்றை நீங்கள் தேவனை மகிமைப்படுத்த பயன்படுத்துகிறீர்களா அல்லது மறைத்துவைக்கிறீர்களா ? அவருடைய வேலையில் பலனளிக்கும் வகையில் உங்களை வளர்த்துக் கொள்ளுகிறீர்களா? முதல் மற்றும் இரண்டாவது ஊழியக்காரரைப் போல நம் திறமைகளை அதிகரிக்க வேண்டும் குழந்தைகளே. தேவன் அப்பொழுது மிகவும் சந்தோஷப்படுவார்.

**With lots of love**

**Praisey akka**

**கேள்விகள்.**

1. இந்த உவமையில் எத்தனை ஊழியர்கள் சொல்லபட்டுள்ளனர் ?
2. ஒவ்வொருவருக்கும் தாலந்து எவ்விதம் கொடுக்கப்பட்டது?
3. இந்த உவமையை சொன்னது யார்?
4. நாம் யாரைப் போல் இருக்க வேண்டும்.
5. நமக்கு தாலந்துகள் கொடுத்தவர் யார்?

# உங்கள் சிந்தனையில்...

சகோ. **K.M.** பிலிப் – பவானி

**அ**ன்பான திருமறை ஆசான் நேயர்கள் யாவருக்கும், உயிர்த்தெழுந்த நாதர் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். தேவனின் மகத்தான படைப்பில் எந்த உயிரினங்களுக்கும் இல்லாத தனிச்சிறப்புகள் மனித இனத்திற்கு உண்டு. அதில் மேன்மையாகக் கருதப்படும் ஆற்றலில் ஒன்றுதான் சிந்திக்கும் ஆற்றல். இதை நமக்கு நாமே பேசிக்கொள்வது என்று எடுத்துக் கொண்டாலும் பொருத்தமாகவே இருக்கும். அதாவது, ஒரு செயலை சரியா, தவறா?, செய்வதா, வேண்டாமா? என்று ஆராய்ந்து முடிவெடுக்கும் திறனே சிந்தனையாகும். இச் சிந்தனையே மனிதனை ஆள்கிறது, மனிதனை அடையாளப்படுத்துகிறது. ஆம், நல்லதை சிந்திக்கும் அதே மனம் தான் கெட்டதையும் சிந்திக்கிறது. நல்லதை சிந்திக்கும் பொழுது நல்லவனென்றும், கெட்டதை சிந்திக்கும் பொழுது கெட்டவனென்றும் **பிரித்து அடையாளப்படுத்தப்படுகிறான்.** இதைத்தான் ஞானி, **அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ அப்படியே அவன் இருக்கிறான்** என்று முத்திரை குத்துகிறார் [நீதி. 23:7]. **சுத்தமுள்ளவர்களுக்கு சகலமும் சுத்தமாயிருக்கும். அசுத்தமுள்ளவர்களுக்கும், அவிசுவாசிகளுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது. அவர்களுடைய புத்தியும், மனசாட்சியும் அசுத்தமாயிருக்கும்** என்று ஆவியானவர் ஆமோதிக்கிறார் [தீத்து 1:15]. ஆகவேதான், **எல்லாக் காவலோடும் உன் இருதயத்தை காத்துக்கொள்** என்று ஞானி சரியான எச்சரிக்கை கொடுக்கிறார்.

ஆம் அன்பானவர்களே! மனித சரீரத்தில் எல்லா உறுப்புகளையும் இயங்கச் செய்வது இருதயமே ஆகும். நம் இருதயத்தை கிறிஸ்து இயேசுவிலிருந்து சிந்தையே நம்மிலும் இருக்கும்படி காத்துக்கொண்டால், அந்த இருதயம் தீங்கானதொன்றும் வராமல் கர்த்தருடைய வழிகளையே நோக்கும்படி கண்களைக் காத்துக்கொள்ளும் [நீதி. 23:26]; இருதயத்தை சுத்தப்படுத்தும் வார்த்தைகளையே கேட்கும்படி காதுகளைக் காத்துக்கொள்ளும் [சங். 119:9]; கர்த்தருடைய துதி எப்பொழுதும் என் வாயிலிருக்கும் படி வாயை காவல் காக்கும் [சங். 34:1]; கைகளில் சுத்தமுள்ளவனாயிருக்கும்படி கைகளைக் கட்டிப் போடும் [சங். 24:4]; துன்மார்க்கருடைய ஆலோசனையின்படி நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலுமிருக்க

கால்களைக் காத்துக்கொள்ளும். அப்பொழுது நம் இருதயத்திற்குள்ளிருந்து புறப்பட்டு வந்து நம்மைத் தீட்டுப்படுத்தும் பொல்லாத சிந்தனைகளும், கொலை பாதகங்களும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய் சாட்சிகளும், தூஷணங்களும் காணாமல் போகும். இவைகள் நாம் மனந்திரும்பும் பொழுது எடுத்துப் போடப்படுகிறது. கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்ற பொழுது கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்படுகிறது (வெளி. 1:6). இப்படி சுத்தமாக்கப்பட்ட நம் இருதயம், பரிசுத்தவான், நீதிமான், உத்தமன், ராஜரீகமான ஆசாரியர்கள், தேவ ஜனம், விசுவாசி, கிறிஸ்தவன் என்ற பட்டங்களால் ஜோடிக்கப்படுகிறது. இப்படி ஜோடிக்கப்பட்ட இருதயம் வெறுமையாய் இருக்குமானால் என்ன நடக்கும் என்பதை இயேசு ஓர் உவமை மூலம் நம்மை எச்சரிக்கிறார். அசுத்த ஆவி ஒரு மனிதனை விட்டுப் புறப்படும் போது வறண்ட இடங்களில் அலைந்து இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல் நான் விட்டு வந்த வீட்டிற்குத் திரும்பிப் போவேன் என்று சொல்லி; அங்கே வந்து அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக் கண்டு திரும்பிப் போய் தன்னிலும் பொல்லாத ஏழு ஆவிகளை தன்னோடு கூட்டிக் கொண்டு வந்து உட்புகுந்து அங்கே குடியிருக்கும். அப்பொழுது அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் பின்னிலைமை அதிகக் கேடுள்ளதாயிருக்கும் (மத். 12:43-45) என்கிறார். ஆம், பாவமறக் கழுவப்பட்டு சுத்தமாக்கப்பட்ட இருதயள்ள விசுவாசிகள் ஒருவருக்கும் இந்தக் கேடு ஏற்படக் கூடாது.

பிரியமானவர்களே! நம்மைத் தீட்டுப்படுத்திக் கேடு உண்டாக்கும் சாத்தானின் சீரழிக்கும் சிந்தனைகள் மீண்டும் உள்ளே புகுந்து விடாதபடி கிறிஸ்து இயேசுவுக்குள் இருந்த சிந்தையே நமக்குள் நிறைந்திருக்க வேண்டும் ( பிலி. 2:5). நம் விசுவாச ஓட்டம் இலக்கை (நித்தியத்தை) நோக்கித் தொடர வேண்டும். வகை தேடிச் சுற்றித் திரியும் சாத்தானின் வலையில் ஒருபோதும் விழுந்து விடக் கூடாது. நாம் தேவனுடைய பிள்ளைகள் தேவனுக்கேற்றபடி சிந்திக்க வேண்டும் (யோவான். 1:12, மத். 15:23) நம் சிந்தனைகள் விசுவாச வாழ்க்கையை இடித்துப்போட அல்ல; கட்டி எழுப்ப வேண்டும். இதற்கு இசைவாக ஆவியானவர் அளிக்கும் சிந்தனைகளால் நம் இருதயத்தை நிரப்ப வேண்டும். அவையாவன, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ,

நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டு (நிரப்பிக்கொண்டு) இருங்கள். (பிலி. 4:8).

அன்பான வாசகரே! வெறும் சிந்தனை முழு பலன், வெற்றி தராது. கோலியாத்தை எதிர்கொண்ட தாவீதின் சிந்தனைகளும், பேச்சும் மிகச் சரியாயிருந்தது. அவைகள் எதிரியை எதிர்கொள்ளப் போதுமானதாயிருந்தது. ஆனால், இன்னும் எதிரி கோலியாத் தாவீதுக்கு எதிரில் நிமிர்ந்து நின்றுகொண்டு தான் இருந்தான்; வீழ்ந்து போகவில்லை. சிந்தனையும், பேச்சு மட்டும் வெற்றி தராது. எப்பொழுது தாவீது கவண் கல்லை சுழற்றி கோலியத்தை நோக்கி அடித்தானோ அப்பொழுது தான் எதிரி வீழ்ந்தான் (1 சா. 17). ஆம், சாத்தானை வீழ்த்த சிந்தனையோடு, செயலும் வேண்டும். கிறிஸ்தவமே செயலில்தான் சாதித்து வருகிறது. ஆகவே தான் சிந்திக்கச் சொன்ன பவுல் தொடர்ந்து... **அவைகளையே செய்யுங்கள் அப்போது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்** என்கிறார் (பிலி. 4:9).

அன்பான விசுவாசியே! நாம் ஒரு செயல் செய்யும் முன் பிலி. 4:8-ல் நம் சிந்தனைகள் குவிக்கப்பட வேண்டும். சிந்தனைக்கும் செயலுக்கும் இசைவிருக்கிறதா? (சம்பந்தம்) என்று நிதானித்துப் பார்க்க வேண்டும். தவறு தெரியும் பட்சத்தில் செயலை நிறுத்த வேண்டும். நற்சிந்தனைக்கேற்ப செயலை திருத்தி அமைக்க வேண்டும். இப்படி தாவீது தன் வாழ்க்கையில் ஒருமுறை தேவனுக் கேற்றபடி சிந்திக்கத் தவறியதால் தான், மாபெரும் வெற்றி வீரன் ஒரு சந்தர்ப்பத்தில் எண்ணிக்கைக்கு அடங்காத தீமைகள் என்னை சூழ்ந்து கொண்டது. என் அக்கிரமங்கள் என்னைத் தொடர்ந்து பிடித்தது என்றும் (சங். 40.12), என் பாவத்தினால் என் எலும்புகளில் சவுக்கியமில்லை. என் மதிக்கேட்டினிமித்தம் என் புண்கள் அழுகி நாற்றமெடுத்தது என்றும் (சங். 38:5) கதறி புலம்புகிறதைப் பார்க்கிறோம். தாவீதின் வரலாற்றில் கரும்புள்ளியாய் அமைந்த நிகழ்ச்சியை நிதானித்து பாடம் கற்றுக்கொள்வோம். பாவத்தின் மேல் வெற்றி கண்ட ஒருவருக்கும் நெஞ்சை உருக்கும் இப்படிப்பட்ட கதறுதல் இருக்கக் கூடாது.

2 சாமு. 11-ஆம் அதிகாரம்:ராஜாக்கள் யுத்தத்திற்கு புறப்படும் காலத்தில் எல்லோரையும் யுத்தத்திற்கு அனுப்பிவிட்டு ராஜா தாவீது சோம்பலுக்கு இடம் கொடுத்து யுத்தத்திற்கு செல்வதைத் தவிர்த்தான். இதுவே அவனது எல்லாப் பாவத்திற்கும் பாதை அமைந்தது. சோம்பளைப் போக்கத் தேவன் அநேக தாலந்துகளை நமக்குக் கொடுத்திருக்கிறார். கொடுத்த தாலந்துகளை பெருகச்

செய்வதில் நம் சிந்தனை இருக்குமானால் அநேகருக்கு ஆசீர்வாதமான வழியைக் காட்ட முடியும் (மத். 25:20-29). நாம் ஆசீர்வாதமாய் இருப்போம். தாவீதின் சோம்பல் அவனை தவறுகள் செய்ய இழுத்துச் சென்றது. அவன் சிந்தனையைக் கெடுத்தது. அரண்மனை உப்பரிகையில் இன்று ஸ்நானம் பண்ணும் ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்த்தான். இப்பார்வையில் ஒழுக்க மில்லை, உண்மையில்லை, நீதி இல்லை தொடர்ந்து குளிக்கும் பெண் பத்சேபாள் மாற்றானின் மனைவி என்று தெரிந்தும் அவளிடத்தில் சேர்ந்ததில் கற்பில்லை, ஒழுக்கமில்லை, உண்மையில்லை, புகழ் இல்லை, இப்பொழுது பத்சேபாள் கற்பமான நிலையை மறைக்க அவன் கணவன் உரியாவி னிடத்தில் மாய்மாலமான அன்பு காட்டியதில் உண்மை யில்லை, புண்ணியமில்லை. கடமை உணர்வுள்ள உண்மை போர் வீரனை வஞ்சமாய் கொலை செய்த தாவீதின் செயலில் உண்மையில்லை, நீதியில்லை, அன்பில்லை, நற்கீர்த்தியில்லை புண்ணியம், புகழ் எதுவுமே இல்லை. ஆகவே தான், எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் அவன் இருதயத்தை விட்டு விலகிப் போனது. தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கு இந்த கதறுதல் ஏற்படலாமா? நாம் கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருப்பதே தேவன் விரும்புகிறார். நம் ஒவ்வொரு வருடைய விருப்பம் இதுவே. தாவீது சோம்பலுக்கு இடம் கொடாமலிருந்திருந்தால் கண்களின் இச்சைக்கு இடமில்லை; விபச்சாரத்திற்கு, பொய்க்கு மாயமாலத்திற்கு, கொலைக்கு இடமில்லை. கிறிஸ்துவின் சிந்தனைக்கு மட்டும் இடம் கொடுத்து, அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருப்போம். ஆவியிலே அனலாயிருப்போம். கர்த்தருக்கு ஊழியம் செய்வோம் (ரோ. 12:11).

அன்பானவர்களே! நம் சிந்தனைகள் தெளிவாயிருந்தால் நம் செயல்களும் சரியாயிருக்கும். சூழ்நிலைகளை, கர்த்தர் எனக்காக யாவற்றையும் செய்து முடிப்பார் (சங். 138:8) என்ற விசுவாசத்தில் தேவனிடத்தில் ஒப்புக்கொடுப்போம். எப்பொழுதும் பிரச்சனைகளையும், சோதனைகளையும், இழப்புகளையுமே சிந்தித்துக் கொண்டிராமல் நம் சிந்தனையை தேவனை நோக்கி, ஜீவனுள்ள வார்த்தைகளை நோக்கித் திருப்புங்கள் (119:113), அப்பொழுது சமாதானத்தின் தேவன் நம்மோடிருப்பார் (பிலி. 4:9) ஆமென்!!

✝

# கிறிஸ்துவுக்குள் யார் குழந்தைகள்?

சகோ. பாண்டியன்

**ப**வுல் அப்போஸ்தலன் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட முதலாம் நூற்றாண்டு கிறிஸ்துவின் சபையாருக்கு அவர்களின் நிறை குறைகளைச் சுட்டிக்காட்டி அநேக நிருபங்களை எழுதினார். அவைகளில் ஒன்றான கொரிந்து சபைக்கு எழுதின முதலாம் நிருபத்தில் - அவர் இன்னும் மாம்சத்தின்படி நடப்பவர்களாக இருக்கிறார்கள். எனவே, கிறிஸ்துவுக்குள் வளர்ச்சியடையாத குழந்தைகளாக இருக்கிறார்களே என்று கடிந்து கொள்வதைப் பார்க்கிறோம் (1கொரி. 3:1-3) சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு விசுவாசமுள்ளவர்களாகி ஞானஸ்நானம் பெற்று விட்டால் மட்டும் போதும் என்று சிலர் எண்ணுகிறார்கள். அது போதாது - ஞானஸ்நானம் என்பது ஒரு ஆவிக்குரிய மறுபிறவி. பேதுரு குறிப்பிடுவது போல அப்போதுதான் நாம் புதிதாக பிறந்த குழந்தைகளைப் போல வேத வசனமாகிய ஞானப்பாலின் மேல் வாஞ்சையாய் இருந்து கற்று தேற வேண்டும். தேவன் அதற்கு தான் சபை கூடுதலையும், வேத வாசிப்பையும் ஜெபிக்கிற சிலாக்கியத்தையும் கொடுத்துள்ளார்.

கொரிந்தியரைப் பற்றி பவுல் குறிப்பிடும் போது, பொறாமையும், வாக்குவாதம் பிரிவினைகளாகிய பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால் நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாய் இருந்து **மனுஷ மார்க்கமாய்** நடக்கிறீர்கள் என்று வருத்தப்பட்டார். நாம் கிறிஸ்துவின் மார்க்கத்தார் என்று வேதம் சொல்வதை அறிந்திருக்கிறோம் (அப். 9:2). கிறிஸ்தவர்கள் தேவனுடைய சித்தத்தை அறிகிற அறிவினால் நிரப்பப்படவும், நற்கிரியைகளாகிய கனிகளை தருபவராகவும், தேவனை அறிகிற அறிவில் விருத்தியடையவும், கிறிஸ்துவுக்குப் பாத்திரராய் நடக்கவும், பொறுமை நீடிய சாந்தம் பெற்று பலப்படுத்தப்பட பவுல் வேண்டுதல் செய்கிறார் (கொலே. 1:9-11) இந்த குணாதிசயங்கள் உடனே வந்து விடாது. அதற்கு நாம் இடைவிடாமல் ஜெபித்து சபை கூடுதலை அலட்சியப் படுத்தாமல் வேத வசனங்களுக்கு முக்கியத்துவம் தருபவர்களாக இருக்க வேண்டும்.

நாம் கிறிஸ்துவுக்குள் வளராமல் இன்னும் **குழந்தைகளாய் இருக்கிறோமா** என்பதை சற்று கவனிப்போம். முதலாவது நாம் **சீக்கிரத்தில் கோபப்படுபவர்களாக** இருக்கக் கூடாது - பிர.7:9. அது முட்டாள்தனம், சிறு பிள்ளைத்தனமானது. அப்படி யோசிக்காமல் கோபித்த **காயின்**, அப்பாவியான தன் சகோதரனை கொன்று

உலகின் முதல் கொலைகாரன் என்ற கெட்ட பெயரெடுத்தான். அப்படியே அரண்மனையில் ராஜாவுக்கடுத்த மரியாதையைப் பெற்றிருந்த **ஆமான்** தேவையில்லாமல் மொர்தகாய் மீது மூர்க்கம் கொண்டு அவனுக்கு கெடுதல் செய்ய நினைத்து தானே அழிந்து போனான் என்று எஸ்தரின் சரித்திர புத்தகத்தில் காண்கின்றோம். நீதி. 14:17–ல் முற்கோபி மதி கேட்டை செய்வான் என எச்சரிப்பதால் நாம் கோபிக்க தாமதமாக வேண்டும் – இயலவில்லை எனில் தேவனிடம் ஜெபித்து அந்த ஞானத்தைப் பெற வேண்டும்.

இரண்டாவதாக, **மன்னிக்க விரும்பாத குணம்** நமக்கிருந்தால் நாம் இன்னும் குழந்தைகளே. தேவனிடமிருந்து நம் தப்பிதங்களுக்கு மன்னிப்புக் கிடைக்க வேண்டுமானால் நாம் பிறர் தப்பிதங்களை மன்னிக்க வேண்டும் என்றார் இயேசு. இதைப் பற்றிய ஆலோசனை சொல்லும்போது அநேகர் எத்தனை முறை தான் மன்னிப்பது என்று சலித்துக் கொள்கின்றனர். ஆனால் ஏழு 70 முறை மட்டும் மன்னிக்க ஆண்டவர் சொல்கிறார். நாமும் தேவனிடம் அநேக தடவை மன்னிப்பு கேட்பதை நினைவு கூருங்கள். அப்போஸ்தலர் உபதேசம் கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் என்கிறது (எபே. 4:32).

மூன்றாவதாக, நம்மைப் பற்றிக் **குறை சொல்பவர்களை பகைக்காமல்** அதில் ஒரு வேளை ஏதாகிலும் உண்மையிருக்கிறதா என்று நிதானித்து நம்மைச் சரி செய்து கொள்ள வேண்டும். அப்படி இல்லாமல் அவர்களிடம் சண்டைக்கு செல்வது நம் சிறுபிள்ளைத்தனத்தையே வெளிப்படுத்தும். வாரந்தோறும் நம்மை நாமே நிதானித்தறிய சொல்கிறது கர்த்தருடைய பந்தி அப்படி உன்னிடம் குறை இல்லாத பட்சத்தில் அவர்களை தேவனிடம் விட்டுவிடு. இல்லையெனில் எரிச்சல் மூண்டு வழக்காடும் சூழ்நிலை ஏற்படும். அதற்கு பதில் நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகிக்கக் கூடாது என்றும், ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக் கொள்ளக்கூடாது என்றும் பவுல் கேட்கிறார் 1 கொரி. 6:7

நான்காவது, **சுயநலமாய்** இருப்பது கிறிஸ்துவுக்குள் வளராத நிலையைக் காட்டுகிறது. அவனவன் தனக்கானவைகளையல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவானாக (பிலி. 2:4) என்கிறார் பவுல். ஏனெனில், ஆண்டவர் இயேசுவும் உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, முகங் கோணாதே (மத் 5:42) என்றார். நம் மத்தியில் இருக்கிற மிகப் பெரிய குறை நம்மை நேசிப்பதைப் போல பிறரை நேசிப்பதில்லை. ஆனால், அதுவே பிரதானக் கற்பனையாக (மத். 19:19) இயேசு கூறினார்.

ஐந்தாவது, **தேவையில்லாமல் பயப்படுவது?** பயம் ஒரு மனிதனை அடிமைப்படுத்தி விடும். இஸ்ரவேலர் எகிப்தின் பெரிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகியும் – கானானில் இருந்த மனுஷரைப் பற்றிய பயம் அவர்களை அதில் பிரவேசிக்க முடியாமல் செய்து விட்டது அதற்கு முக்கியக் காரணம் அவிசுவாசமே (எபி. 3:19) பேதுருவின் அவிசுவாசமே ஆண்டவர் இருந்தும் அவனை கடலுக்குள் மூழ்கச் செய்தது. உலகக் கவலைகள் நம்மை தேவனிடம் இருந்து பிரித்து விடும் (2 கொரி. 7:10) தேவன் நம்மோடே இருப்பதை விசுவாசித்து தாவீதைப் போல, நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன் என்று சொல்வோமாக.

ஆறாவது, **கனியற்ற வாழ்வு** – சபை மக்கள் கிறிஸ்துவின் பண்பை வெளிப்படுத்த வேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார் பிலி. 1:10,11 ஆவிக்குரிய கனிகளைப் பற்றி வேதத்தில் நாம் பார்க்கிறோம். அவைகள் இல்லாதவன் கண் சொருகிப்போனக் குருடனாயிருக்கிறான் என்று பேதுரு கடிந்து கொள்கிறார் (2 பேதுரு 1:5–9) ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்க இயேசு தம் வசனத்தின் மூலம் சுத்திகரிக்கிறார் (யோவான் 15:2,3) நம்மை நாமே சோதித்தறிவோம்.

நிறைவாக, **உலக ஞானத்திற்கு** முக்கியத்துவம் அளிப்பது தேவ ஞானத்திற்கு விரோதமாக எதுவுமேயில்லை (1 கொரி. 1:18–21) உலகம் எவ்வளவுதான் முன்னேறினாலும் தன் சுய ஞானத்தினாலும் தேவனை அறிய முடியவில்லை. கர்த்தருக்கு பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம் என்பதை தெரிந்த நாம் உலக படிப்பு, பதவி, ஐசுவரியத்தைக் குறித்து பேசி பிரமிப்படையாமல் தேவ ஞானத்திற்குக் கீழ்ப்படிவோம். தேவக் கிருபை நம் அனைவரோடுங் கூட இருப்பதாக ஆமென்! ✝

---

## *பேர் சொல்லி அழைக்கும் கர்த்தர்*

- ஆபிரகாமே, ஆபிரகாமே என்று அழைத்த கர்த்தர் – (ஆதி. 22:1,11)
- யாக்கோபே, யாக்கோபே என்று அழைத்த கர்த்தர் – (ஆதி. 46:2)
- மோசே, மோசே என்று அழைத்த கர்த்தர் –( யாத். 3:4)
- சாமுவேலே, சாமுவேலே என்று அழைத்த கர்த்தர் – (1 சாமு. 3:10)
- சவுலே, சவுலே என்று அழைத்த கர்த்தர் – (அப். 9:4 (1–9)

கிறிஸ்து என்னும் மார்க்கம் பாடங்கள்

# ஆயிரம் வருஷம் அரசாட்சி

சகோ. ஜே. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார், சென்னை.

**முன்னுரை:**

1). அன்பானவர்களே! வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தைப் புரிந்துகொள்ளும்படி நமக்கு வேதாகம சரித்திரம் நன்கு தெரிந்திருக்க வேண்டியது அவசியம்.

2). மேலும் வேதத்தின் உவமைகள், தரிசனங்கள், கனவுகள் பற்றி வேதத்தின் விளக்கங்கள் அறிந்துகொள்வதும் அவசியம்.

3). 1கொரி. 4 : 6 மற்றும் உபா. 29 : 29 ன் படி வேதாகமம் பேசுகிற (விளக்கம் சொல்லுகிற) இடத்திலே மட்டும் பேசி, வேதம் பேசாத இடங்களில் நாமும் மௌனமாய் இருப்பது சிறந்தது.

4). வேதத்தை விளக்கும்போது நாம் விளக்க விரும்புகிற வசனத்திற்கு மேலான மற்றும் கீழான வசனங்களையும், அதற்கான தேவனுடைய நோக்கத்தையும், திட்டத்தையும், வழிமுறைகளையும் அறிந்துகொள்வது அவசியம், 1தீமோ. 2 : 4.

5). மேலும், அந்த வசனத்தின் பேச்சாளர் யார்? கேட்பவர்கள் யார்? எந்த இடத்தில், எந்தக் காலத்தில் பேசப்பட்டது அல்லது எழுதப்பட்டது என்பதை அறிந்துகொண்டு, புரிந்துகொண்டால் நாம் கிறிஸ்துவின் சாயலில் வளர பிரயோஜனமாய் இருக்கும்.

I. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திலே எழுதப்பட்ட சம்பவங்களை யோவான் தரிசனமான காட்சியாகப் பார்த்தார், வெளி. 1 : 2.

அ. நித்தியமானவைகளை நம் கண்ணால் பார்க்க முடியாது. பரலோகத்தையும் அங்கே இருக்கிறவர்களையும் அங்கு நடைபெறுகிற நிகழ்சிகளையும் மனுஷனால் பார்க்கமுடியாது, 2கொரி. 4 : 18.

ஆ. அப்போஸ்தலனாகிய யோவான் கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானவராக அந்த நிகழ்சிகளைப் பார்த்திருந்தாலும் பூமிக்குரிய பொருட்களோடு:பஞ்சைப்போல, உறைந்த மழையைப் போல, வெண்கலம் போல, பெருவெள்ளத்து இரைச்சல்போல என்று ஒப்பிட்டு அவருக்குக் காட்டப்பட்டு அதை நமக்கு எழுதி விளக்குகிறார், வெளி. 1 : 10, 13 – 15.

இ. ஆகையால் தேவன் பூமிக்குரிய காண்கிற பொருட்களைக்கொண்டு அவருடைய நித்தியம், வல்லமை, அதிகாரம், இரட்சிப்பு, ராஜ்யமாகிய சபை, நம்பிக்கை, ஆறுதல், பரலோக வாழ்க்கை, தைரியம், பிசாசின் வீழ்ச்சி, தண்டனை போன்றவைகளை யோவானும், நாமும் புரிந்துகொள்ளச் செய்கிறார்.

ஈ. பழைய ஏற்பாட்டிலும் இப்படிப்பட்ட உதாரணங்கள் நம்மால் கண்டுபிடிக்க முடியும்:

1]. ஆதி. 41 ல் பார்வோன் கண்ட சொப்பனத்தில் அவலட்சணமான ஏழு பசுக்கள், புஷ்டியான ஏழு பசுக்களைப் பட்சித்தது என்பது செழுமையான ஏழு வருஷங்களை பஞ்சத்தின் ஏழு வருஷங்கள் பட்சிக்கும் என்பதைக் குறித்தது, ஆதி. 41 : 1 – 4.

2]. அதேபோல சாவியான, செழுமையான கதிர்கள் என்பதும் வருஷங்களைக் குறிக்கிறதே தவிர ஒரு கதிர் இன்னொரு கதிரை விழுங்கும் என்பது அர்த்தமல்ல, ஆதி. 41 : 5 –7.

3]. ஏழு செழுமையான வருஷங்களை வரப்போகிற ஏழு வருட பஞ்சம் பட்சிக்கும் என்பதை தேவன் ஒரு காட்சியாகப் பார்வோனுக்குக் காட்டினர்.

4]. ஏழு வருஷங்களை ஒரே நேரத்தில் நம்மால் பார்க்க முடியாது என்பதற்காக தேவன் அப்படிச் செய்தார்.

உ. தானியேல் 2 ல் நேபுகாத்நேச்சார் ராஜாவுக்கு ஒரு சிலையைக் காட்டவேண்டும் என்பது தேவனுடைய நோக்கமல்ல. அந்தச் சிலையின் மூலமாக நான்கு உலக ராஜ்யங்களையும், நான்காவது ராஜ்யத்தின் காலத்திலே ஸ்தாபிக்கப்படபோகிற தேவனுடைய நித்தியமான ராஜ்யத்தைப் பற்றியும் தெரிவிப்பது தேவனுடைய நோக்கமாக இருந்தது, தானி. 2 : 31 – 45.

ஊ. சுவிசேஷத்தைக் கண்ணால் பார்க்க முடியாது என்பதற்காக அதை ஒரு விதைக்கு ஒப்பிட்டு அதன் வல்லமையையும் பலனையும் கிறிஸ்துவானவர் விளக்கினார், மத். 13 : 23 ; லூக். 8 : 11.

எ. கிறிஸ்து என்கிற அஸ்திபாரத்தையும் அவர்மேல் கட்டப்பட்ட ஜீவனுள்ள கற்களான ஆத்துமாக்களையும் கண்ணால் பார்க்க முடியாது என்பதற்காக அதை ஒரு குத்துவிளக்காக யோவானுக்குக் காட்டினார், வெளி. 1 : 20.

ஏ. அதேபோல யோவான், மிருகம், வெவ்வேறு நிறமுள்ள குதிரைகள், வில் அம்பு, பட்டயம், தராசு போன்றவைகளைப் பார்க்கிறார். நாம் ஒன்றை யோசிக்கவேண்டும் இவைகள் பூமிக்குரியவைகளா? அல்லது ஆவிக்குரியவைகளா? பூமிக்குரியதானால் இவைகள் பரலோகத்தில் இருக்குமா? இருக்காது. இவைகளைக்கொண்டு தேவன் நமக்கு அவருடைய ஊழியம், தண்டனை, நியாயத்தீர்ப்பு போன்றவற்றை விளக்குகிறார்.

II. வெளிப்படுத்தின விசேஷம் 20 ம் அதிகாரத்தில் யோவான் கண்ட காட்சிக்கு நேரடியான அர்த்தம் கொள்ளாமல் வேறொரு அர்த்தமாக இருக்கும்.

அ. ஒரு பாம்பின் தலையை நசுக்கி அதைக் கொன்று அழிப்பதைபோல கிறிஸ்துவானவர் சாத்தானையும் அதன் வல்லமையையும் அழித்தார், ஆதி. 3 : 15 ; எபி. 2 : 14 – 15 ; வெளி. 20 : 1 – 3.

ஆ]. வெளி. 20 : 4 – 5 ல் கிறிஸ்துவுக்காக வாழ்ந்த பரிசுத்தவான்கள் பரலோகத்தில் இருந்ததை கண்டதாக யோவான் எழுதுகிறார்.

1]. யோவான். 3 : 13 ல் இயேசு கிறிஸ்துவைத் தவிர இதுவரை ஒருவரும் பரலோகத்திற்குச் செல்லவில்லை என்று இதே யோவான், சுவிசேஷப் புத்தகத்தில் பதிவு செய்திருக்கிறார்.

2]. அப்படியானால் கிறிஸ்துவின் வருகைக்கு முன்பு நியாயத்தீர்ப்பில் பங்குகொள்ளாமல் அநேக பரிசுத்தவான்கள் நேரடியாகக் பரலோகம் செல்வார்கள் என்பது வேதத்தின் உபதேசமுறையாக இருக்கவில்லை.

3]. கிறிஸ்துவின் கடைசி வருகைக்குமுன் நீதிமான்களில் கொஞ்சம்பேர் பரதீசிலும், கொஞ்சம்பேர் பரலோகத்திலும் இருப்பார்கள் என்பது சத்தியத்தின் விளக்கமல்ல, 1தெச. 4 : 14, 16.

இ. ஆனால், கிறிஸ்துவுக்குள்ளாக பிரவேசிக்கிறவர்கள் பூமியில் வாழும்போதே கிறிஸ்துவுக்குள்ளாக உயிர்த்தெழுதல் பெற்று, தேவனுடைய சிங்காசனத்தண்டையிலே தைரியமாகச் சேரமுடியும், எபி.4 : 16.

ஈ. கிறிஸ்துவுக்குள்ளாக புதிய ஜீவனைபெற்று வாழுகிறவர்கள் கிறிஸ்துவின் சிங்காசனத்திலே [ஆட்சியிலே ] பங்கு பெற்று அவரோ டுகூட ஆட்சி செய்வார்கள், ரோமர். 6 : 4 ; எபே. 2 : 7 ; வெளி. 20 : 5.

உ. நாம் சரீரத்தில் வாழ்ந்தாலும், கிறிஸ்துவுக்குளாக நம்முடைய வாழ்க்கை [ஜீவன்] பரலோகத்திலே தேவனிடத்தில் இருக்கிறது, கொலோ. 3 : 3.

III. இப்படிப்பட்ட பரலோக வாழ்க்கையை நாம் பூமியில் வாழ்ந்து,கிறிஸ்துவுக்குள்ளான ராஜரீக ஆசாரியராக, கிறிஸ்து வோடு ஆளமுடியும் என்பதை வெளி. 20 : 6 விளக்குகிறது.

அ. நாம் பரிசுத்தவான்கள் ஆகும்படி கிறிஸ்துவுடனேகூட மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, அவருடைய உயிர்த்தெழுதலின் சாயலிலே ஆவிக்குரிய மனுஷராகப் பிறக்கிறோம், கொலோ. 2 : 12 ; 3 : 1 ; கலா. 2 : 20 ; ரோம. 6 : 4.

ஆ. தேவன் நம்மை கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும், ராஜாக்களும், ஆசாரியர்களுமாக இப்பொழுதே ஆக்கினார் என்பதை வெளி. 20 : 6 கூறுகிறது. அதற்கு ஆதரவாக வெளி. 1 : 6 ; 1பேது. 2 : 5, 9 ஆகிய வசனங்கள் உள்ளன.

இ. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் கிறிஸ்துவானவர் உயிர்த்தெழுந்து, வல்லமையையும் மகிமையும் அதிகாரத்தையும் ஆளுகையையும் பெற்றுக்கொண்டார் என்கிற உறுதியைக் கொடுக்கிறது, வெளி. 5 : 12 – 13 ; 17 : 14 ; எபி. 1 : 13 ; 1பேது. 3 : 22.

ஈ. அதேபோல கிறிஸ்துவுக்காக இந்த உலகத்தின் பாவங்களுக்கு மரித்து, அவரோடுகூட எழுந்தவர்கள் கிறிஸ்துவினுடைய எல்லா ஆசீர்வாதங்களிலும் ஆளுகையிலும், பங்கு பெறுகிறார்கள் என்பதையும் விளக்குகிறது, வெளி. 1 : 5 – 6 ; 5 : 9 – 10.

உ. ஆகையால், தேவனுடைய ராஜ்யம் தீர்க்கதரிசனங்களின்படி கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு வந்த பெந்தெகொஸ்தே

நாளில் ஸ்தாபிக்கப்பட்டது என்பதையும் அதிலே நாம் தேவனால் இணைக்கபட்டோம் என்பதையும் சத்தியத்தின்படி நம்பவேண்டும், கொலோ. 1 : 13.

ஊ. மேலும், கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையும் அவருடைய ராஜ்யமும் ஒன்றே என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும், எபே. 5 : 5, 23.

எ. கிறிஸ்துவினுடைய சபையான ராஜ்யம் 1000 வருடத் திற்குப் பிறகு முடிந்துபோவது அல்ல. அது நித்தியமான ராஜ்யமாய் இருக்கிறது, தானி. 2 : 44.

**முடிவுரை:**

1. ஆகையால் கிறிஸ்துவானவர் அவருடைய ராஜ்யம் இந்த பூமிக்குரியது அல்ல என்று அவருடைய சிலுவை மரணத்திற்கு முன்பே தெளிவுப்படுத்தினார், யோவான். 18 : 36.

2. கிறிஸ்து ஒரு பூமிக்குரிய ராஜாவாக பூமியிலே அரசாளுவது தேவனுடைய சித்தமல்ல என்பதற்காக இயேசுவானவர் அப்படிப்பட்ட எண்ணமுள்ளவர்களை விட்டு விலகிப் போனார், யோவான். 6 : 14 – 15.

3. வெளிப்படுத்தின விசேஷப் புத்தகத்தில் ஆயிரம் வருஷம் என்று சொல்லபட்டது மனுஷருடைய எண்ணிக்கையின்படி வரப்போகிற ஆயிரம் வருட அரசாட்சியைக் குறிக்கவில்லை; மாறாக, இப்பொழுது நடைபெறுகிற கிறிஸ்துவினுடைய ஆட்சியை அடையாளமாகக் (Symbolic) கூறுகிறது.

4. ஆகையால், நாம் தேவனும், கிறிஸ்துவும் என்ன யோசனையோடு தெரிவித்தார்களோ; அப்போஸ்தலனாகிய யோவான் என்ன கருத்தோடு எழுதினாரோ அப்படியே நாம் எண்ணவேண்டும். முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் சரியாகப் புரிந்துகொண்டு தாங்கள் ஆவிக்குரிய ராஜ்யத்தில் இருப்பதை உறுதி செய்தார்கள்.

5. பெந்தெகொஸ்தே நாள் தொடங்கி உலகம் முடியும் வரைக்கும் அல்லது கிறிஸ்துவானவர் வருகையின் நாள் வரைக்கும் எத்தனை வருடங்களோ அத்தனை வருடங்களையும் 1000 வருடங்கள் என்று சங்கேத மொழியில் சொல்லப்பட்டது.

6. நம்முடைய போர் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல; ஆகவே, கிறிஸ்துவின் ராஜ்யமும் பூமிக்குரியது அல்ல; அது ஆவிக்குரியது. ஆகையால், இப்பொழுதே நாம் ராஜ்யத்தில் வீரர்களாக சாத்தானோடும், பாவத்தோடும் போராடி வெற்றி பெற வேண்டும், எபே. 6 : 10.

7. அப்படியே வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை எழுதின யோவான் தான் ராஜ்யத்தில் (In the Kingdom) இருந்ததாக எழுதினார், வெளி. 1 : 9. கிறிஸ்தவர்கள்மேல் இன்னும் அதிகமான கொடுமைகள் ரோமர்களால் வரும் என்பதற்காக இவைகளை மறைமுகமாகத் தெரிவித்தார்.

## முகாமில் கலந்துகொண்ட ஆண்கள்



## முகாமில் கலந்துகொண்ட பெண்கள்



## முகாமில் கலந்துகொண்ட வாலிபர்கள்



"Registered" with RNI No: TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Date Of Publication: 17/18 th of Every Month
Date Of Posting: 20/21 of Every Month
Place Of Posting: Erode HPO

## மே 1-5, 2023 வரை காங்கேயம் கிறிஸ்துவின் சபையில் நடைபெற்ற VBS வகுப்புகளின்போது...








To:

**திருமறை தியானம்**
**நம்பிக்கை** தொலைக்காட்சியில்
செவ்வாய் காலை 6:30 - 7:00 மணி
வெள்ளி காலை 7:30 - 8:00 மணி

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.